

# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி

பெப்ரவரி - 2007 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

பெப்ரவரி - 2007


மலர்-39 இதழ்-01



**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்



**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்



**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486


# உள்ளே





| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| வார்த்தைகளிற் கூட.... | - | 02 |
| நல்மனத்தோர் பேறுபெற்றோர் | - | 04 |
| வல்லாதிக்க அமெரிக்கா.... | - | 05 |
| சாப்பிடுவது சரியா? பிழையா? | - | 09 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 10 |
| அழகின் அலங்காரம் | - | 13 |
| மாணவர் பக்கம் | - | 16 |
| இலக்கிய மஞ்சரி | - | 18 |
| மருத்துவம் மருத்துவம்.... | - | 19 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 23 |
| மட்டக்களப்புத் தமிழ் | - | 25 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |



விலை : *20/=*

ஆண்டு சந்தா *: 300/=*

(தபாற்செலவு உட்பட)

## இறைவாக்கு

கடவுள் உருவமற்றவர், அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபட வேண்டும்.

(யோவான் 4:24)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

ஒவ்வொருவருடைய வாழ்விலும் மாற்றம் அவசியம். அதாவது பேச்சில், பார்வையில், சிந்தனையில், எழுத்தில், உடைமையில், தொழிற்பாட்டில், சூழலில் இப்படியாக மாற்றங்கள் நிகழவேண்டிய விடயங்களைப்பற்றி அடுக்கிக்கொண்டே போகலாம்; ஏனெனில் மாற்றம் ஒன்றே மாறாதது.

ஆனால், இந்த மாற்றங்கள் மேலிருந்து அதல பாதாளத்துக்குச் செல்ல வேண்டுமா அல்லது அதல பாதாளத்திலிருந்து படிப்படியாக மேல் நோக்கி எழ வேண்டுமா?

மனிதனுடைய மனம் குரங்கைப் போன்றது; அது தாவித்தாவிப் பாயும்; தொடங்கிய இடத்துக்கே மீண்டும் வரலாம்.

நமது நாட்டு அரசியல் சதுரங்க காய் நகர்த்தலும் தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்கின்ற விடயங்கள் சம்பந்தமாகவும் நோக்கின் இப்படித்தான் மாறி மாறி மாற்றங்கள். இந்த மாற்றங்கள் ஒருபடி மேலே போயுள்ளன என்று எண்ணிய வண்ணம் இருக்க, திடீரென அதல பாதாளத்துக்குத்தான் வந்துள்ளது போலும். வடக்கு கிழக்கு இணைந்திருக்காத எந்த யோசனையும் அதல பாதாளம்தான் என்பது இலங்கையின் உள்நாட்டு போர்ச் சரித்திரம் அறிந்தவர்களுக்கு வெளிச்சம். இதில் அமைச்சரவை மாற்றங்கள் உலக அளவில் பெயர் பதித்திருப்பதும் அனைவருக்கும் வெளிச்சம்.

இந்தத் தருவாயில் தன் கட்சிக்காரர்களையே கோட்டைவிட்ட தலைவர்கள் மற்றுமொரு தேர்தலுக்கு ஆயத்தமாவதாக ஆருடம் கூறியிருப்பது தான் மிச்சம்.

இப்போதே மூன்று வேளை சோற்றுக்குப் பட்டபாடு போதாதென்று இன்னுமொரு தேர்தல் வந்தால் எங்கே போய் முட்டுவது.

எதிர்வரும் 22ம் திகதியைத்தான் முக்கிய புள்ளிகளெல்லாம் கவனித்த வண்ணம் இருக்கின்றனர். அதற்கு முன்னதாகவே அமெரிக்க இராஜ தந்திரிகள் விடும் அறிக்கைகள் புலிகளுக்கு பச்சை சமிக்ஞை காட்டியிருப்பது போல் தோன்றுகின்றது. இருந்தாலும் தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுபவர்களிடம் ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களுக்கு 21ம் திகதி மிகவும் முக்கிய நாளாக அமைகின்றது. மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்று சொல்லி நெற்றியில் விபூதி அணிவித்து, மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய் மண்ணுக்கே திரும்புவாய் என்று சிந்திக்க செய்து, மனம் மாறாவிட்டால் விண்ணரசுக்குச் செல்லமுடியாது என்பதை நினைவூட்டி, நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கச் செய்வது தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய விபூதிப் புதன் ஆகும்.

நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள காலங்களில் தவக்காலமே நம்மையே நாம் உற்றுப் பார்க்க செய்கின்றது; சீர் தூக்கிப் பார்த்து மனம் மாற அழைக்கின்றது; எனவே, மனம் மாறுவோம். நமது பேச்சில், செயலில், சிந்தனையில், உடையில், பழக்கவழக்கங்களில்.... மாற்றங்களைக் கொண்டு வருவோம். தவக்காலம் இயேசுவின் பாடுகளின், மரணத்தின் தத்துவத்தைக் கற்றுத் தந்து மாற்றத்தைக் கொண்டு வர நாம் நம்மையே இசைவாக்கிக்கொடுப்போம். நமது மன மாற்றங்கள் பிறரையும் மாற்ற சிலுவையையே ஆயுதமாகக் கொள்ளுவோம்.



- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைகளிற் கூட வன்முறை வேண்டாம்



இன்று நாம் வாழும் சூழலில் வன்முறைகள் வகை தொகையின்றி நிகழ்வதோடு, அவையே இயல்பாகி, சமூகமும் அதற்கு இரையாகி விட்டதை அவதானிக்கிறோம். வன்பாங்கான சிந்தனைகள் எங்கிருந்து வருகின்றன? வன்முறைகள் எமது அயலில் நிகழ்ந்தாலும் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்கும் மெத்தனம் எப்படி உருவாயிற்று? நல்ல விழுமியங்களைப் போற்றி மதித்த சமூகத் தலைவர்களும், முதியவர்களும் எங்கே காணமற் போயினர்?

இந்தக் கேள்விகளை ஒரு கணம் நின்று, நிதானித்து எமது மனதினுள் அசைபோட்டுப் பார்த்தால் அர்த்த பூர்வமான சிந்தனைகள் பலவற்றைக் கண்டு தரிசிக்கலாம். முதலில் எமது உள்ளத்தில் உருவாகும் எண்ணங்களுக்கு நாமே நல்ல வழிகாட்டிகளாக, கண்காணிப்பாளராக இருக்கப் பழகுவது அவசியம். மனதில் இருந்து புறப்படும் எண்ண அலைகளுக்குச் சக்தியுண்டு என்பதாக உளவியல் வல்லுநர்களும் தெரிவித்துள்ளனர். எண்ணங்களால் தான் இவ்வுலகம் இயங்குகிறது. எண்ணங்களின் சொந்தக்காரர் ஆகிய நாம், அவற்றைப் பல்வேறு பரிமாணங்களிலும் கையாளலாம். நேர்நிலை விளைவுகளும், எதிர்மறை நிகழ்வுகளும் எண்ணப் பொறிகளின் விளைவே அன்றி வேறு இல்லை. இதனால்தான் மனம் கெட்டால் மாநிலம் கெடும் என்னும் ஆன்றோர் வாக்கு நிலவுகிறது.

சிந்தனையைக் காவிச் செல்லும் ஊடகமான வார்த்தைகளும் இன்று வன்முறை நெடி தடவி மனித மனங்களைக் குதறும் சீரற்ற தொடர்பாடற் கலாசாரமும் பரவி வருகிறது. சொற்களைப் பிரயோகிக்கும் போது நாம் அவதானமாக இருக்க வேண்டும். இல்லையெனில் இலக்கற்ற அம்புகள் அப்பாவிப் பட்சிகளையும் பந்தாடிவிடுவதுபோல் மெல்லிய இதயங்களைக் கிழித்து ரணமாக்கி விடலாம்.

வார்த்தைகளின் பொருளை நுட்பமாகத் தேர்ந்து, சமய, சந்தர்ப்பத்தை நுணுகி, ஆராய்ந்து, அவற்றின் விளைவுகளை ஒரு கணம் மனதினுள் அலசிப் பார்த்து, நல்ல, இதமான சொற்களைப் பயன்படுத்துவதனால் எமது சூழலை மகிழ்ச்சிப்படுத்தலாம். கம்பன் கூடச் சொல்லின் செல்வனான அநுமன், அசோக வனத்தில் சிறையுண்டிருந்த சீதையிடம் பேசும் முன்பாக ஒரு தடவை ஒத்திகை பார்த்துக் கொண்டதாகக் கூறி, சொற்களின் தேர்வில் எத்துணை பொறுப்புணர்வு அவசியம் என்பதைப் புரியவைக்கிறான்.

சொற்கள் எமது உள்ளத்தின் இயல்பைப் பிரதிபலிக்கின்ற கண்ணாடியாகவும் உள்ளன. பேசும் வகையிற் பேசியமையால் வரலாற்றைப் புரட்டிய சம்பவங்கள் பலவுண்டு. இதயத்தின் மேன்மை, அன்பின்பெருமை, பண்பாட்டுச் செழுமை, கண்ணோட்டத்திறன், அறிவின் ஆற்றல் இவையாவும் சொற்களின் வாயிலாக வெளிப்படும் போது உறவுகளும், உணர்வுகளும் நேர்நிலையாகப் பாதிக்கப்பட்டு அனுகூலம் விளைகின்றது.

இன்றைய ஊடகங்களிலும், சமூகநிறுவனங்களிலும் சொற்கள் வண்ணம் இழந்து, மென்மை இழந்து வெற்று ஓசைகளாய்ப் பரிமாறப்படுதலும் வார்த்தைகளின் வன்முறைக்குக் காரணம் ஆகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வது நல்லதாக இருப்பின் செயலும் செம்மையாகவே அமையும். வெறும் பண்டங்களின் தெரிவிற்கே மணிக்கணக்காக காலத்தை விரயம் செய்யும் மனிதர்கள், சொற்களைத் தெரிவு செய்ய எத்தனை நிமிடங்களைச் செலவிடுகின்றனர்?

"நாநலம் என்னும் நலன் உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூம் அன்று"

என்பதாக வள்ளுவனே சொல்லின் பெருமைக்குத் தனி இடம் வழங்கி உள்ளான். அவனே "இச் சொல்லை வெல்வதற்கு வேறோர் சொல் இல்லவே இல்லை" என்பதைத் தெரிந்து ஒரு சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுரை பகர்கிறான்.

வார்த்தைகள் தடிப்பதனால் வாழ்க்கையே முரண்பாட்டில் வெடிக்கவும் நேரலாம். பூக்களாய் வார்த்தைகளைத் தொடுக்கும் போது வன்முறையாளனும் மனக் கசிவுற்றுக் கருணை கொள்வான். பணிவான வார்த்தைகளின் மகிமை பற்றி விவிலியமும் பலபடக் கூறுகிறது.

வார்த்தையே கடவுள் ஆகிவந்தது எனில் அவற்றை வாள் முனையாக்கி, தேள் விஷமாக்கி உலகியலில் துயர் பெருக்கும் நிலைமைக்கு வழிவகுப்பது நலமா என்று சிந்திப்போம். சொல்வதைச் சொல்லும் பாங்கிற் சொல்லி உள்ளவர்களையும், உலகையும் வெற்றி கொள்வோம்.

–முறையூர்
சந்திரசேகரன் சசீதுரன்

## கவிதை

காற்றில் பறப்பதல்ல கல்வி
காலத்தால் அழிவதல்ல கல்வி
களவு போவதல்ல கல்வி
கல்லடி படுவதல்ல கல்வி
அலைக்கு ஒதுங்குவதல்ல கல்வி
அடிக்கு அடங்குவதல்ல கல்வி
படித்தால் வருவதே கல்வி
இதை உணர்ந்து கற்பதே
மேன்மை தரும்



## சிந்தனைக்கு வாழ்க்கை

உலகம் என்பது வட்டமானது
வட்டம் என்பது பூச்சியமாகும்
பூச்சியம் என்பதில்
ஒன்றுமே இல்லை
இது தான் உலகம்
இது தான் வாழ்க்கை

செல்வி.தே.நிரோஷினி
14/2 தோமஸ் லேன், மட்டக்களப்பு

## சுக்கா மிளகா




சும்மா கிடைப்பதற்குச்
சுதந்திரம் என்ன
சுக்கா மிளகா - அக்கா

–பாரதிதாசன்

## சுதந்திரத்தின் பிரசவம்


இரவிலே...ஒரு
கிராமப்புறத்திலிருந்து
மற்றொன்றுக்கு
நகைமணிகளோடு
தனியாகப்
பெண்ணொருத்தி
சென்று திரும்பும் சுகமான
சூழலிருக்கும் போதுதான்
சுதந்திரம் உண்மையில்
பிரசவித்திருக்கிறது



–மகாத்மா காந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்மனத்தோர் பேறுபெற்றோர்



கைகளைத் தலையில் ஊன்றி
கடுமையாக யோசித்தேன்
இறைவனிடம் யாசித்தேன்!

முன்பு
பூலோகம் வந்த தெய்வமெல்லாம்
ஏன் இப்போது வருவதில்லை?...
தீய நெறிகண்டும்
தீராப் போர் கண்டும்
தீவினையால்
மக்கள் படும்
அவஸ்தை கண்டும்
கொலைகள்
கோடி கண்டும்
தேடி ஏன் வரவில்லை?
கொடு வினையோர்
கொட்டம் அடக்க,
ஏன் இப்போது தெய்வமெலாம்
தேடி இங்கு வருவதில்லை

தான் படைத்த தேசமெலாம்,
கொடுமைத் தீயால்
எரிவது கண்டும்
ஏன் இன்னும் வரவில்லை?...

அழைப்பு மணி ஓசை கேட்டு
அங்கே ஓடிச்சென்றேன்
முகத்திலோ பேரொளி
உதட்டிலோ மென்நகை
கண்களில் கருணை!

மகளே!
மூளையை நீ
நன்றாக முறுக்குகின்றாய்...
முனைப்பாக
முணங்குகின்றாய் என்றார்...
ஆஹா!... யேசுவல்லோ...
மீண்டும் வந்தார்
ஆச்சரிய அம்புகள்
என்னைத் தாக்க
மயிர்க்கூச்செரியும் உணர்வுடன்
மாபரன் பாதம்
பணிந்தே வணங்கினேன்

மகளே!
உன் உள்ளங் கண்டேன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு
முன்பு
மரியமகதலேனாவை
கல்லுடன் கலைத்த
கூட்டத்திற்கு
தரையில் எழுதினேன்...
"உங்களுள் பாவமில்லாதவன்
முதற்கல்லை
எறியட்டும்" என்று!
ஆனால் ஒருவர் கூட நிற்காது
மௌனமாக மறைந்தார்கள்
தம் தவறை உணர்ந்தார்கள்..

காரணம்,
தம் தவறை ஏற்கவும்
தன்னைத்தான் உணரவும்
உரைக்கல்லாய் இருந்தார்கள்...

இப்போதோ
உள்ளமெலாம் உறைந்திருப்பது..
நான்.... நான்... நான்...
என்ற உக்கிர மமதை...
வக்கிர புத்தி...
இவர்களை
வரிந்து கட்டிப் போட்டதன்றோ?...

இன்றைய
மாந்தர் மனந் திரும்ப
எத்தனை செய்தோம்!
இவர்கட்குப் புரியவில்லை
மனம் வருந்தவில்லை
இவர்
திருந்தவில்லை..


புதிய உலகம் ஒன்று
விரைவிற் படைப்போம்

வீணர்கள் வீழ்வார்கள்...
நல்மனத்தோர் பேறு பெறுவார்கள்
பொறுத்திருந்து பார்மகளே...
ஆடுவதெல்லாம் அடங்குவதற்கே,
துள்ளுவதெல்லாம் விழுவதற்கே,
ஓடுவதெல்லாம் நிற்பதற்கே...
ஏறுவதெல்லாம் இறங்குவதற்கே...
என்றார் யேசு ...

வயலற் சந்திரசேகரம்
இல.3, நொத்தாரிஸ்லேன்,
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சதாமின் மரணதண்டனை பற்றிய பார்வை...

# வல்லாதிக்க அமெரிக்கா சொல்லாமல் புகட்டும் பாடங்கள்

**சோ**வியத் ரஷ்யாவின் வீழ்ச்சியினை அடுத்து உலக நாடுகள் மத்தியில் சர்வதேசச் சண்டியனாக அமெரிக்கா வலுப்பெற்றுள்ளது. நேட்டோ (NATO) அணியென்னும் 267 நாடுகள் கொண்ட வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்புக்குத் தலைமை தாங்கும் அமெரிக்கா, தன்னை மிஞ்சி எந்தவொரு நாடும் தலைநிமிரக்கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாகவுள்ளது. உலக நாடுகள் மத்தியில் ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் போதனை செய்து போலி முகத்தினைக் காட்டிவிட்டு, நவகாலனித்துவத்தின் மூலமாக நயவஞ்சமாகப் பல நாடுகளைச் சுரண்டி வருகின்றது. அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கும், சுரண்டலுக்கும் தடையாகவுள்ள நாடுகள் சாம-பேத-தான - தண்ட மார்க்கங்கள் மூலமாக அடக்கப்படுகின்றன; அல்லது அந் நாடுகளின் தலைமைகள் அகற்றப்படுகின்றன. ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதியின் தூக்குத் தண்டனையை மேற்படி கண்ணோட்டத்திலேயே பார்க்க வேண்டியுள்ளது.

அமெரிக்காவின் ஆதரவாளர்களாக இருக்கும்வரை, சர்வாதிகார ஆட்சியாளர்கள் கூட அமெரிக்காவினால் தட்டி வளர்க்கப்படுகின்றனர். மாறாக, அமெரிக்காவுக்கு எதிராக அவர்கள் என்றாவது விரல் நீட்டினால், அவர்கள் ஜனநாயக விரோதிகளாகவும் சர்வாதிகாரிகளாகவும் பரப்புரை செய்யப்படுகின்றனர். சர்வதேச நாடுகளால் ஒதுக்கப்படுகின்றனர்; ஒழிக்கப்பட்டும் விடுகின்றனர்.



சதாம் ஹூசைன் அமெரிக்காவின் ஆதரவாளராக இருந்த வரை அல்லது அமெரிக்காவிற்கு சவாலாக இல்லாதவரை, அவர் புரிந்த மனிதப் படுகொலைகளையும், மனிதஉரிமை மீறல்களையும் அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை. சதாம் ஹூசைன் தனது நாட்டில், சுயநிர்ணய உரிமை கோரிப் போராடிய சகோதர குர்திஷ் இன மக்களை குண்டுகள் போட்டு அழித்தார். ஈராக்கில் ஜனநாயகத்திற்காகக் குரல் எழுப்பியவர்களைக் கொலை செய்தார்.

அமெரிக்காவின் ஆதரவுடன் ஈரானுடன் யுத்தம் தொடுத்தார். யுத்தத்தில் இரு நாடுகளின் பக்கமும் இலட்சக் கணக்கான மக்கள் அழிந்தனர். அப்போதெல்லாம் ஜனாதிபதியாக இருந்த சதாமின் செயல்களை அமெரிக்கா ஆதரித்தது; அல்லது கண்டு கொள்ளவில்லை. அமெரிக்காவுக்குப் பெற்றோலியத்தினைத் தங்கு தடையில்லாமல் வழங்குகின்ற குவைத்தினை ஈராக் 1989களில் ஆக்கிரமித்தது. அமெரிக்காவின் மிரட்டல்களுக்கு சதாம் ஹூசைன் அடிபணிய மறுத்தார்; அப்போது தான் சதாம் ஹூசைன் அமெரிக்காவின் எதிரியானார். கொடுங்கோலாட்சியாளனாகச் சித்தரிக்கப்பட்டார். அன்றிலிருந்து ஈராக்கின் தலைமையிலிருந்து சதாம் ஹூசைனை அகற்றுவதற்கு அமெரிக்கா, ராஜ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரரீதியாகவும் - இராணுவரீதியாகவும் செயற்பட்டது.

அல்குவைதா இயக்கத்தின் மூலமாக அமெரிக்காவின் உலக வர்த்தகமையம் தாக்கப்பட்ட வேளையில், ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் கொல்லப்பட்ட வேளையில் "கடவுளின் தீர்ப்பேயிது" என சதாம் ஹூசைன் குறிப்பிட்டார். அக்கூற்று விவேகமாக இல்லாவிட்டாலும், வேகமாகச் சிந்திக்கும் அமெரிக்க ஜனாதிபதியை மேலும் சீண்டிவிட்டது. ஜோர்ஜ்புஷ் உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் பயங்கரவாதத்தை மட்டுமல்லாமல், தனக்குச் சவால் விடுக்கின்ற நாடுகளையும் பயங்கரவாதத்திற்கு உதவும் நாடுகள் என்ற பட்டியலில் சேர்த்துக்கொண்டார். அல்குவைதா இயக்கத்தலைவர் ஒஸாமா பின்லேடனையும் அவரைச் சார்ந்தவர்களையும் அழிக்கப் போவதாகக் கூறி ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்காவும் அதனைச் சார்ந்த நேட்டோ நாடுகளும் போர் தொடுத்தன. முல்லா முகமட் ஓயர் தலைமையில் இருந்த தலிபான் ஆட்சியை அகற்றி, அமெரிக்காவுக்குச் சார்பான பொம்மைத் தலைமை (ஹமீட்ஹர் சாயி) ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

அடுத்து, மனிதகுலத்திற்கு அவலத்தினைத் தருவிக்கக் கூடிய பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி, ஈராக் மீது அமெரிக்காவும், பிரித்தானியாவும் போர் தொடுத்தன. சதாமின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது. அமெரிக்காவின் பொம்மைத் தலைவரான நூரிஅல்மலிக்கியின் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ஜனாதிபதி புஷ்ஷின் முழு விருப்பத்தினையும் நிறைவேற்றும் வகையில் அவர் செயற்பட்டார். கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதியும், அவரது முக்கிய சகாக்களும் உலக ஒப்பனைக்காக ஈராக்கில் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டனர். புஷ்ஷினாலும், அல்மலிக்கினாலும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தூக்குத் தண்டனையினை அந்த நீதிமன்றம் வழங்கியது. சதாம் ஹூசைனும், அவரது நெருங்கிய சகாக்களும் தூக்கிலிடப்பட்டனர். ஆனால், அமெரிக்கா கூறிய பேரழிவு தரும் ஆயுதங்களை அவர் வைத்திருக்கவில்லை என்பது உண்மை.

சதாம் ஹூசைன் சர்வாதிகாரியாகச் செயற்பட்டார்; மக்களின் மனித உரிமைகளை மீறினார் என்றெல்லாம் அமெரிக்கா பரப்புரை செய்தது. அவரை அந்த நிலைக்கு ஆக்கியதில் அமெரிக்காவுக்கும் பங்குண்டு என்பதை மறுக்க முடியாது. மேலும், உலகில் பல்வேறு நாட்டுச் சர்வாதிகாரிகள் அமெரிக்காவால் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளமையையும் - பாதுகாக்கப்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

ஈரானில் சர்வாதிகாரியாக ஆட்சி செய்த "ஷா"மன்னன், சிலியின் சர்வாதிகாரி ஒகஸ்ரோ பினோசெட், பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸ், இந்தோனேசியா முன்னாள் ஜனாதிபதி சுகாட்டோ, பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர்கள் ஷியாஉல்ஹக் ஆகியோர் அமெரிக்காவின் விசுவாசிகளாக இருந்தமையால் அந் நாடுகளில் நடைபெற்ற ஜனநாயக விரோதச் செயல்கள், மனிதகுல அவலங்கள் என்பவற்றை அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை. அவர்களின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர், அத் தலைவர்களை அமெரிக்கா பாதுகாத்தது. அவர்களுக்கு சார்பாகக் குரல் எழுப்பியது. ஷியா உல்ஹக் விமான விபத்தில் இறந்ததால் அவரைப் பாதுகாக்க வேண்டி ஏற்படவில்லை.

ஈரானில் 1979/1980 காலப் பகுதியில் ஷா' மன்னனின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இதற்கு மதத் தலைவர் ஆயத்துல்லா கொமெய்னி அவர்களின் தலைமையிலான மதசீர்திருத்தப் புரட்சி வழிகோலியது. இவ்வேளையில், மன்னன்'ஷா'வும் சகாக்களும் அமெரிக்காவிடம் அரசியல் தஞ்சம் கோரிச் சென்றனர். அவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறும், நீதிவிசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் ஈரானிய அரசாங்கம் கோரியது. ஈரானில் மனித உரிமைகளைக் கேவலப் படுத்திய "ஷா" மன்னனையும் சகாக்களையும் அமெரிக்கா ஒப்படைக்கவில்லை; பாதுகாத்தது.

சிலி சர்வாதிகாரி ஒகஸ்டோ பினோ ஆட்சிக்காலத்திலும் அந்நாட்டில் மனிதப்படுகொலைகள், சித்திரவதைகள் மலிந்து காணப்பட்டன. மேலும், இந்தோனேசியா சர்வாதிகாரி சுகாட்டோ இரண்டு இலட்சம் கம்யூனிசவாதிகளைக் கொன்றொழித்தார். பிலிப்பைன்சில் ஆரம்பத்தில் ஜன நாயகவாதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சர்வாதிகாரியாக தன்னை மாற்றிக் கொண்ட மார்க்கோஸ் மனித உரிமைகளை மீறினார். தனக்கு எதிரான சக்திகளைப் படுகொலை செய்வித்தார். எதிர்க்கட்சித்தலைவர் அக்கி யூனோவும் கொல்லப்பட்டவர்களில் ஒருவராவார். இப்படியான தலைவர்கள் அந்தந்தநாட்டு நீதிவிசாரணைகளில் மனிதக்கொலைஞர்களாக அடையாளம் காணப்பட்ட போதும், அமெரிக்காவின் ஆளுமையாலும், ஆசீர்வாதத்தாலும் பாதுகாக்கப்பட்டனர். இயல்பாக இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் அடைவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. சர்வாதிகாரி சுகாட்டோ இப்போதும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் "ஷியா உல்ஹக்" ஜனநாயகரீதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம மந்திரி சுல்பிகார் அலிபூட் டோவின் அரசாங்கத்தினைக் கவிழ்த்தார். பூட்டோவைச் சிறையில் அடைத்துக் கொடுமைப் படுத்தினார். போலியான நீதி விசாரணையின் பேரில் தூக்கிலிட்டார். இராணுவ ஆட்சியாளர் அமெரிக்காவின் விசுவாசியாதலால், அவற்றையெல்லாம் அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை. மேலும், தற்போதைய பாகிஸ்தானின் ஆட்சியாளர் முஷாரப் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நவாஷெரீப் பின் ஆட்சியைக் கவிழ்த்து ஜனநாய விரோதமாக ஆட்சி பீடம் ஏறினார். அவரது அரசாங்கத்தினைப் பல நாடுகள் அங்கீகரிப்பதா என ஆலோசித்தன. அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்திற்கு "முஷாரப்" துணை போனதால் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவரைச் சிறந்த நண்பனாகவும் சீரிய ஆட்சியாளனாகவும் ஏற்றுக்கொண்டார். முஷாரப் அணுவாயுதத்தினை உற்பத்தி செய்த போதிலும் அமெரிக்கா அவர் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. தெற்காசியாவில் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிற்கு நிர்ப்பந்தங்களைக் கொடுப்பதற்கும், தெற்காசியாவில் அமெரிக்காவின் சதிச்சித்து விளையாட்டுக்களைக் காட்டுவதற்கும் முஷாரப்பின் தேவை அமெரிக்காவிற்கு வேண்டியதாகவுள்ளது.

ஒட்டு மொத்தமாக யாவற்றினையும் பகுத்தும், தொகுத்தும் பார்க்கின்ற போது அமெரிக்கா நவகாலனித்துவ - ஏகாதிபத்திய நலன்களிலேயே கூடுதலான அக்கறை காட்டுகின்றது. ஜனநாயக அரசியலை விட முதலாளித்துவச் சரணடல்களைச் செய்வதிலேயே ஆர்வமாகவுள்ளது. அமெரிக்காவின் வல்லாதிக்கத்திற்கும் - முதலாளித்துவச் சரண்டலுக்கும் இடமளித்தால் சர்வாதிகார ஆட்சியானால் என்ன? சாத்தானின் ஆட்சியைக் கூட அமெரிக்கா ஆதரிக்கும். மாறாக, அமெரிக்காவை விமர்சித்தால், உண்மையான உருப்படியான ஜனநாயக ஆட்சிகளைக் கூட அமெரிக்கா சிதைக்கும் என்பதே யதார்த்தமாகவுள்ளது. சதாம் ஹூசைன் அமெரிக்காவின் தப்புத்தாளங்கள் அனைத்திற்கும் ஆட்டம் போட்டிருந்தால், ஷியா முஸ்லிம்கள், குர்திஸ் முஸ்லிம்களைக் கருவறுத்திருந்தாலும் கண்டும் காணாமல் இருந்திருக்கும்.

இந்த யதார்த்தத்தினை உணர்ந்ததாலோ என்னவோ, அமெரிக்காவை விமர்சித்த லிபியத் தலைவர் கேணல் கடாபி பெட்டிப் பாம்பாகிவிட்டார். "வல்லவன் வாழ்ந்தான் வலுவிழந்தான் வீழ்ந்தான்", "வல்லமை வெல்லும் எதிர்த்தால் கொல்லும்" என்பது "அமெரிக்காவின் தாரக மந்திரமாகவுள்ளது. அமெரிக்காவுக்கு அடங்கினால் வாழலாம்; ஆளலாம் எதிர்த்தால் வீழலாம்; மாறலாம். இதுவே சதாம் ஹூசைனின்; பாடமாகவுள்ளது

**-G. சிறிநேசன்**
M.A.(pol.sel) PGDE (merit)

## அரசியல் சுதந்திரம்

எவருடைய உரிமைகளைக் காப்பதற்காக
அரசு அமைக்கப்பட்டிருக்கிறதோ,
அவர்களிடமிருந்துதான்
அரசு அதிகாரம் பெறுகிறது;
எனவே, ஆளப்படுபவரின் சம்மதத்தின்
பேரிலேயே அரசாங்கத்தின் அதிகார
எல்லையும் இருப்பும் இயங்கவேண்டும்.

–அண்ணல் அம்பேத்கார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசத்தில் ஒன்றுபட்டு வாழ போலந்து மக்களுக்கு
## திருத்தந்தை ஊக்கம்



ஜனவரி 10ம் திகதி திருத்தந்தை பொது மக்களுக்கு ஆற்றிய உரையில் "விசுவாசத்திலும் இயேசுவின் மீதான அன்பிலும் ஒன்றுபட்டு வாழ" என்று போலந்து நாட்டுக் கத்தோலிக்கர்களுக்கு திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். போலந்து நாட்டில் வார்சாவின் பேராயர் போலந்து கம்யூனிஸ்டுகளின் இரகசிய காவல் துறையுடன் இணைந்து செயல்பட்டதை ஒப்புக் கொண்டு தனது பேராயர் பணியை இராஜினாமாச் செய்துள்ளார். இந்த நிகழ்வு போலந்து மக்களிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை உணர்ந்த திருத்தந்தை கத்தோலிக்க விசுவாசிகள் இயேசுவின் மீதுள்ள விசுவாசம், அன்பு போன்றவற்றில் உறுதியுடன் நிலைத்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

திருத்தந்தை பேசுகையில் "புனித முடியப்பருக்கு புகழ் சாற்றும் இந்நாளில் இந்தத் திருச்சபையின் முதல் வேத சாட்சியின் வாழ்வு நமது விசுவாச வாழ்வுக்கு மாதிரியாக இருக்க வேண்டும். இயேசுவின் மீதான விசுவாசம், அன்பு, ஞானம் போலந்து நாட்டின் கத்தோலிக்கர்களை ஒன்றுபடுத்துவதாக. கம்யூனிச அடக்குமுறை, கட்டுப்பாடு போன்ற கசப்பான உணர்வுகள் தாக்காத வண்ணம் பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார்.



உலகின் மிகப்பெரிய ஓவிய மங்கை மோனாலிஸாவின் உண்மைப் பெயர் லிஸா கியாகோண்டா (Lisa Giaconda)



ஓர் உணவின் சுவை என்ன என்றறிய நாக்கிலுள்ள சுவை மொட்டுக்களுடன் மூக்கும் தேவை. கண்களை மூடிக் கொண்டு, மூக்கைப் பிடித்துக் கொண்டு சாப்பிட்டால் ஆப்பிளுக்கும், வேகவைத்த உருளைக் கிழங்கிற்கும் வித்தியாசம் தெரியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாப்பிடுவது சரியா? பிழையா?



தயிர் சாப்பிட்டவுடன் - **வாழைப்பழம்** சாப்பிடக்கூடாது.

வாழைக்காய், வாழைப்பூ, வாழைத்தண்டு சாப்பிட்டவுடன் - **தயிர், மோர்** சாப்பிடக்கூடாது.

பால் குடித்தவுடன் - **மீன், புளிப்புப்பழங்கள் எலுமிச்சம் பழம்** சாப்பிடக்கூடாது.

தயிர், மோர் குடித்தவுடன் - **பால்** குடிக்கக்கூடாது.

தயிர் சாதம் சாப்பிடும்போது - **முள்ளங்கி** சேர்த்துச் சாப்பிடக்கூடாது.

கோழி இறைச்சி, ஏனைய இறைச்சிகள் உண்டவுடன் - **தயிர், மோர்சாதம்** சாப்பிடக்கூடாது.

உளுந்துப் பருப்பு உணவுடன் - **முள்ளங்க** சாப்பிடக்கூடாது.

தாமரைக்கிழங்குடன் - **தேன்** இணைத்து சாப்பிடக்கூடாது.

**வெற்றிலையையும் நல்லெண்ணையையும்** இணைத்துச் சாப்பிடக்கூடாது.

கொண்டைக் கடலை சாப்பிட்டவுடன் - **எள்** உணவு சாப்பிடக்கூடாது.

கரும்பு தின்றவுடன் - **தண்ணீர்** குடிக்கக்கூடாது.

**தேன், எண்ணெய், நீர்** மூன்றும் சம அளவில் சேர்ந்தால் நஞ்சாக மாறும்.

மீன் சாப்பிட்டவுடன் **கீரைகள்** சாப்பிடக்கூடாது.

**பனம்பழமும் வாழைப்பழமும்** உடனுக்குடன் சாப்பிடக்கூடாது.

**மீன் பொரித்த** எண்ணெயை மீண்டும் உபயோகிக்கக்கூடாது.

**பலகாரங்கள் சுட்ட** எண்ணெயை மீண்டும் உபயோகிக்கக் கூடாது.

**அமிர்தமே ஆனாலும் அளவுக்கு மிஞ்சினால் அதுவே நஞ்சாகும். உண்ணும்போது கவனம் தேவை.**




(டாக்டர் தே. தனபாலன்
நன்றி - 'ஹெல்த்')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இம்முறை தொண்டனின் சில நிமிடங்களுக்காக மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திரு. தொமிங்கோ ஜோர்ச் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தோம். மிகவும் கண்ணியமான, கடமையுணர்ச்சி மிக்க, எவராலும் விரும்பப்படுகின்ற ஒரு மனிதராக திரு.ஜோர்ச் அவர்களை நாம் இனம் கண்டோம். கடற்றொழில் பரிசோதகராக 1975ம் ஆண்டு சேவையில் இணைந்து கொண்ட இவர், தனது திறமையின் காரணமாக 1990ம் ஆண்டில் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தராக பதவியுயர்வு பெற்றார். பின்னர் 2000ம் ஆண்டில் உதவிப்பணிப்பாளராக நியமனம் பெற்றார். தென் கொரியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளில் விசேட பயிற்சி பெற்றுள்ளார். இவரைத் தொண்டனின் சில நிமிடங்களுக்காக அணுகிய போது மிகவும் மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தார்.

**திரு.ஜோர்ஜ் அவர்களே, உங்கள் கடற்றொழில் அமைச்சின் கட்டமைப்பு பற்றி சிறிது விளக்குவீர்களா?**

ஆம்! கடற்றொழில் அமைச்சின் கீழ் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம், கரையோரம் பேணல் திணைக்களம், கடற்றொழில் கூட்டுத்தாபனம், தேடுதல் கண்காணிப்புப் பிரிவு, சீநோர் நிறுவனம், தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் நிறுவனம், தேசிய நீரியல் உயிரின வளர்ப்பு அதிகார சபை என்பன உள்ளன.

**தேடுதல் கண்காணிப்பு என்றால் என்ன?**

கடற்றொழிலுக்குச் செல்பவர்கள், அவர்களது கடற்கலங்கள் என்பன தொடர்பான கண்காணிப்பு, காணாமல் போனால் தேடுதல் செய்தல் என்பவற்றிற்கு பொறுப்பாக இருக்கும் பிரிவு.

**தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் நிறுவகம் என்பது பற்றி?**

இது கடற்றொழிலாளர்கட்குப் பயிற்சி வழங்கும் நிறுவனம். இது மீன்பிடிக் கலங்களை இயக்கும் பயிற்சி, இயந்திரவியற் பயிற்சி போன்ற இன்னோரன்ன பயிற்சிகளை வழங்கும் நிறுவனம் ஆகும். இதன் பிராந்திய கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி மட்டக்களப்பில் உண்டு. முன்பு நாவலடியில் இது இயங்கியது; சுனாமியால் பின்னர் சின்ன உப்போடை கடற்றொழில் கூட்டுத்தாபன கட்டடத்தில் இயங்குகின்றது.

**கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் பற்றிச் சிறிது கூறமுடியுமா?**

இது பல்வேறு கடமைக் கூறுகளைக் கொண்டது. கடற்றொழில் முகாமைத்துவம், சட்ட ஒழுங்கு விதிகள் பேணல் அமுல் செய்தல், மீன்பிடிக் கலங்களின் பதிவு, மீன்பிடிக்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் அனுமதியைப் புதுப்பித்தல், மீனவரின் நலன்புரி அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துதல் போன்ற பணிகளை எமது திணைக்களம் செயற்படுத்துகின்றது.

**உங்களது மாவட்டக் காரியாலயக் கட்டமைப்புப் பற்றி கூறுங்களேன்..**

இலங்கையில் 15 கரையோர மாவட்டங்கள் உண்டு. இவற்றில் மாவட்டக் காரியாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு உதவிப் பணிப்பாளர்கள் பொறுப்பாக இருப்பார்கள். அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளர்கள் பணிபுரிவார்கள். கடற்றொழில் பரிசோதகர்கள், மாவட்டப் பரிசோதகர்கள், இயந்திர உதவியாளர்கள் என்போரும் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

**கடலக இயந்திர உதவியாளர்கள் என்றால் ...?**

இவர்கள், மீன் பிடிக் கலங்களைப் பரிசோதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கடலோட்டத்திற்குத் தகுதியானதா என்பது பற்றி அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அத்துடன் படகுகட்டும் தளங்கட்கும் விஜயம் செய்து உற்பத்தி செய்யப்படும் படகுகளின் தரம் பற்றி பரிசோதனை செய்வர். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 13 மீன்பிடிப் பரிசோதகர் பிரிவுகள் உள்ளன; ஆனால், எட்டு மீன்பிடிப் பரிசோதகர் மட்டுமேயுள்ளனர். இரண்டு பிரதேச கூட்டுறவுப் பரிசோதகர்கள் இவற்றிற்கான கணக்காய்வு மேற்பார்வைகட்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

**சுனாமியின் பின்னரான, மீள்கட்டுமானப் பணிகள் பற்றிக் கூறமுடியுமா?**

இலங்கையில் 1750 கிலோ மீற்றர் நீளமான கடற்கரை உள்ளது. இதில் சிறு சிறு தீவுகளைச் சுற்றிவர உள்ள கடற்கரைகளின் நீளங்களும் உள்ளடங்கும். மட்டக்களப்பைப் பொறுத்தவரை வெருகல் தொடக்கம் கல்லாறு வரை 105 கிலோமீற்றர் நீளமான கடற்கரையுண்டு. இவை சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டன. மீன்பிடி இறங்கு துறைகள், சமூக மண்டபங்கள் , மீனவர் வீடமைப்புத் திட்டங்கள், மீனவர் கிணறுகள் என்பன தூர்ந்து போயின. குறிப்பாக நாவலடியில் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி மற்றும் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் என்பனவற்றின் இழப்புகள் ஈடுசெய்ய இயலாதன. இவற்றுடன் கல்லாறு தாம் போதியின் பாதிப்பு, மீனவர்கள் நூற்றுக்கணக்கில் மரணித்தமை என்பனவெல்லாம் மீனவர் சமூகத்திற்கும், நாட்டிற்கும், பொருளாதாரத்திற்கும் பெருத்த நட்டங்கள். இதுவரைக்கும் வெளியிணை இயந்திரப் படகுகள் 700, உள்ளிணை இயந்திரப் படகுகள், வாவித் தோணிகள் (1700), கடற்தோணிகள் (1200), கரைவலைகள், வலையுபகரணங்கள் உட்பட பலபொருட்கள் மீனவர்கட்கு வழங்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்டவை உட்பட சுமார் 3700 மீன் பிடிக் கலங்கள் நிவாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. 21 மீன்பிடித் துறைமுகங்கள் FAO ஊடாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வீதிகள், தங்குமண்டபங்கள் என்பன உட்பட பல அபிவிருத்தித் திட்டங்கள் செய்யப் பட்டு வருகின்றன.

**மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை மீன் அறுவடையின் நிலை எவ்வாறு காணப்படுகின்றது?**

சுனாமியின் பின் 2005ல் மொத்த மீன்பிடி 50% ஆல் குறைவடைந்தது. எனினும் 2006இல் 80% ஆக அது அதிகரித்துள்ளது. அத்துடன் மீன்வளம் அருகும் ஆபத்தும் உள்ளது. எமது மீனவர்கள் சுமார் 10-15 கிலோமீற்றர் வரையான தூரக் கடலுக்கே மீன்பிடிக்கச் செல்லுகின்றனர். ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் வசதி அவர்கட்கு இல்லை. தற்போது தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான 4 ஆழ்கடல் மீன்பிடிப்படகுகள், நோர்வே தூதரக அனுசரணையுடன் சேவா லங்கா அமைப்பினால் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை ஓட்டமாவடி, வாழைச்சேனை, நாவலடி, காத்தான்குடி பிரதேச மீனவர் சமாசங்கட்கு வழங்கப்படும்.

இது தவிர UNDP உதவியுடன் தலா 36 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு அதி குளிரூட்டி வாகனங்கள் மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி கூட்டுறவுச் சங்க சமாசத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனால் மீனவர்கள் அதிகளவு வருமானம் பெறவாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**இது தவிர அறுவடை அதிகரிப்பதற்கு என்ன செயற்பாடுகள் தேவை என இனம்காணப்பட்டுள்ளது?**

மீனவர்கட்குத் தேவையான நவீனத்துவப் பயிற்சிகள் இல்லை. நவீன முறைகள் மீன்பிடியில் பயன்படுத்தப்படுவதில்லை. எனவே பாதிக்கப்பட்ட கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி பொருத்தமான இடத்தில் மீளமைக்கப்பட வேண்டும். கடற்றொழிலாளர்களும் நவீன முறைகளினைக் கைக்கொள்ள ஈடுபாடு காட்ட வேண்டும். உண்மையில் ரியுனா இன மீன்கட்கு அதிக கேள்வி வெளிநாடுகளில் உண்டு. அவ்வகையான மீன்களினைப் பிடிப்பதில் ஈடுபாடு வர வேண்டும்.

**அருகிவரும் கடல் உயிரினங்கள் தொடர்பாக உங்கள் நடவடிக்கைகள் என்ன?**

சட்ட விரோத மீன்பிடிகளைத் தடைசெய்துள்ளோம். வாவிமுட்டுக்கண் வலை, "பொற்றோல்மக்ஸ்" பாவித்து மீன், இறால் பிடித்தல் தடை உட்பட பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்; என்றாலும் கடற்றொழிலாளர்கள் தாமகவே இவ்வாறான நடவடிக்கைகளை தவிர்த்துக் கொண்டால் தவிர இது கடினமான காரியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மட்டக்களப்பு வாவியும் உங்கள் திணைக்களத்தின் கீழ் வருகின்றதா?

❖ மட்டக்களப்பு வாவியும் உவர்வாவியானதால் எமது திணைக்களத்தின் கீழ்தான் வருகின்றது. இலங்கையில் புத்தளம் வாவிக்கு அடுத்த பெரிய வாவி மட்டக்களப்பு வாவிதான். 168 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள இவ்வாவியில் 112 வகை உயிரினங்கள் உள்ளன. அவையும் அருகி வருகின்றன. எமது வாவி என்ற உள்ளுணர்வு கொண்டவர்களாக நாம் ஒவ்வொருவரும் இருந்தால்தான் வாவியைக் காப்பாற்ற முடியும். இவ்வாவி மட்டக்களப்பு மாவட்டம் பூராக துண்டுபட்ட வகையில் பரந்துள்ளது.

மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு ஜனவரி மாதம் இடமாற்றம்பெற்று வந்த திரு.தொ.ஜோர்ச் அவர்கள் தனது உடனடி நடவடிக்கை காரணமாக பல மில்லியன் ரூபா பெறுமதியான புதிய கட்டடம் ஒன்றைப் பெறுவதற்கான பண ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளார். அத்துடன் கடற்றொழில் பயிற்சிக் கல்லூரியை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் அதன் உதவிப் பணிப்பாளருடன் இணைந்து மேற்கொண்டுள்ளார். இறுதியில் தொண்டனின் சார்பில் நன்றிகூறி விடை பெற்றோம். அப்பொழுது நேரம் இரவு 9.00மணி.

# ஏழ்மை, எல்லா மக்களுக்குமுரிய பிரச்சினையே - திருத்தந்தை-



"சமூக நிறுவனங்களும் திருச்சபை நிறுவனங்களும் ஒன்றுபட்டு ஏழ்மையை ஒழிக்க உழைக்க வேண்டும். அது பொருளாதார ஏழ்மையானாலும், மனித வளம் மற்றும் சிந்தனாசக்தி ஏழ்மையானாலும் அதை ஒழிப்பது நமது கடமையாகும். ஏழைகள் எல்லோருக்கும் பொதுவானவர்கள்" என்று திருத்தந்தை கூறியுள்ளார்.

இத்தாலிய அரசியல் அதிகாரிகளைச் சந்தித்த திருத்தந்தை "துன்பத்துக்குள்ளாகும் ஒவ்வொரு ஏழையும் திருச்சபையின் உடைமையாகவும், ஒவ்வொரு மனிதனுக்கும் உரியவனாகவும் உள்ளான். இன்னும் குறிப்பாக சமூகத் தலைவர்கள் என்ற முறையில் ஏழைகள் மீது உங்களுக்கும் அதிக பொறுப்புள்ளது" என்று கூறினார்.

அதேபோல் ஏழ்மைநிலையில் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு உடல் அளவிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகளை விடுவிக்கும் பொறுப்பு திருச்சபைக்கும் அரசிற்கும் உள்ளது. இந்த ஏழ்மையை ஒழிக்க திருச்சபை தொடர்ந்து மகிழ்ச்சியுடன் ஒத்துழைப்பு நல்கி வருகின்றது. மனித உயிர்களின் மாண்பு கருதி எந்த ஏழையும் இயற்கை மரணத்திற்கு முன் ஏழ்மையால் இறக்க விடக்கூடாது" என்றார் திருத்தந்தை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருவேசுரா சுவாமி, வாத்தியார எங்க உட்கார வைப்பது, ஒரு கால் கட்டையாக உள்ள அந்தக் கதிரயிலயா? இல்ல பிஞ்சு தொங்குற இந்தச் சாய்மானக் கதிரயிலயா? அப்படியும் இல்லாட்டி முத்தத்திலேயே கால காலமாகக் கிடக்குற சாக்குக் கட்டிலிலயா? என்று அவள் யோசித்த வண்ணம் இருக்க சங்கராபரணம் வாத்தியார் வீட்டு முன்கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. அப்போதுதான் அன்னமேரி, வாத்தியார நல்லா ஏற இறங்கப் பார்த்தாள்.

என்னடாப்பா! இரவு பூசைக்கு வரும்போது பட்டு வேட்டி, சட்ட சால்வ என்று அணிந்து வந்தவர் இப்போ என்னடா என்றால் லோங்ஸ் சேட்டோட வாரார். ம்... போட்டிருக்கிற லோங்ஸ்சும் சேட்டும் நல்லாத்தான் ஒத்துப் போகுது. இது என்ன இது, கையில வேற பை கொண்டு வாரார். ஏதும் பரிசு கொண்டு வாராரோ! இருந்தாலும், மற்றக் கையில இருக்கிற பெரிய குடைதான் கொஞ்சம் சொதப்புது என்று அவள் நினைத்து விழிகளை அகல விரித்து மூடுவதற்குள் வாத்தியாரோட சுசந்தனும், காந்தியும் வீட்டுக் கதவை நெருங்கி வந்து விட்டார்கள்.

ஆ... வாங்க உள்ள வாங்க, இன்றைக்கு நீங்க வருவீங்க எண்டு இவங்க இரண்டு பேரும் காலையில இருந்தே புலம்பிக் கொண்டு எதிர் பார்த்துக்கிட்டிருந்தாங்க எண்டு சொல்லிக் கொண்டு தன் நிலையை பிள்ளைகள் மேல் சுமத்திக்கொண்டு உள்ளே உள்ள அறையின் கதவில்



# அழகின் அலங்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் சற்று ஓரமாய் ஒளிந்து கொண்டாள். வாத்தியார் அந்த ஒரு கால் கட்டையாக இருந்த கதிரையில தானே போய் அமர்ந்து கொண்டார். சுசந்தனும் காந்தியும் அவர் இரு பக்கத்திலும் சற்று சாய்ந்தபடி நின்று கொண்டார்கள். வாத்தியாரும் அவர் கொண்டுவந்த அப்பிள், ஒரேஞ், கிரேப்ஸ் பழங்களை பையிலிருந்து வெளியே எடுத்துக் கொண்டிருந்தார்.

உள்ளே உள்ள கதவோரமாய் நின்று கொண்டிருந்த அன்னமேரி, மீண்டும் தன் பார்வை யால் வாத்தியாரைப் படம்பிடிக்க ஆரம்பித்தாள். அன்னமேரியும் என்ன சளைத்தவளா, தன் கரு விழிப் படப்பிடிப்பை சங்கராபரணம் வாத்தியின் தலையிலிருந்தே ஆரம்பித்தாள்.

எண்ணை வைத்து நன்றாகப் படிய இழுக்கப்பட்ட நெளிநெளி தலைமுடி, நெற்றியின் முன்னே சுருள் செய்யப்பட்டு நடிகர் சிவாஜி கணேசனைப் போல் மேலே மேவப்பட்டிருந்தது. காதோரம் உள்ள நரை ஊகிக்க முடிந்த வயதைக் காட்டிக்கொண் டிருந்தது. அகன்ற நெற்றி, கூரிய மூக்கு, கண் ணாடிக்குள்ளால் தெரிந்த சிறிய கண், அடர்த்தியான புருவம், நீண்டு உயர்ந்த காதுகள், மெல்லிய கோடு போன்ற அந்தக் காலத்து நடிகர்களின் மீசை, இளம் சிவப்பு உதடுகள், குழி விழுந்த நாடி, தினமும் சவரம் செய்யப்பட்ட கன்னங்கள், நீண்ட கழுத்து அதில் ஆதாமின் அப்பிளின் அடியே உள்ள பெரிய மச்சம், அகன்ற தோற்பட்டை, ஒடுங்கிய வயிறு... இப்படி யாக அவள் அங்குலம் அங்குலமாய்ப் படம் பிடித்து வரும் போது வாத்தியாரின் செருமல் அவளை இடை மறித்தது.

அன்னமேரியின் இந்த ஒளிந்திருந்து பார்க்கும் மர்மத்தில் இவ்வளவு சமாச்சாரங்கள் அடங்கி இருக்கா என்று நாம் வியக்கலாம். இங்கே தான் பெண்களின் கலைக்கண் பார்வையின் ஆற்றல் பலம் பொருந்துகின்றது. நேரே பார்க்கும் போது தலை குனியும் பெண்கள், ஆண்கள் தலை குனியும் அல்லது பராக்கு பார்க்கும் அந்தக் கணப் பொழுதில் அங்குலம் அங்குலமாய் உன்னிப்பாகப் படம் பிடித்து விடுவார்கள். ஆண்கள் கண்ணாடியில் தாங்களே பார்த்திராத இஞ்ச் (inch) விசயங்களைக் கூட இவர்கள் பார்த்துத்தான் சொல்லும் பரிதாப நிலை ஆண்களுக்கு, அதுவும் அமசடக்காக இருக்கும் பெண்கள் என்றால் இன்னும் ஒரு படி மேல். இந்தப் படம் பிடித்து பின் மனக் கோட்டை கட்டும் விசயங்களில் பெண்களுக்கு நிகர் பெண்களாகத்தான் இருக்க முடியும்.



இறைச்சி வாங்கப் போயிருந்த அய்யாத்துரை பெரியதொரு ஏவரை சத்தத்தோடு வீட்டுக்குள்ளே வந்தான். ஏவரைக் காற்றில் அவன் அடித்திருந்த கள்ளின் வாசனை அந்த இடத்தை நிரப்பியது. வாத்தியாரையோ பிள்ளைகளையோ அவன் கண்டு கொள்ளவில்லை. ஏய் எங்கடி அவ... எண்டு குசினிக் குள்ளே போனான். அன்னமேரி பின்னாலேயே ஓடி வந்து "சத்தம் போடாதீங்க" என்று சொன்ன மாதிரியே "ஏய் மனுசா, இறைச்சி வாங்கப் போனியே எங்க இறைச்சி" என்று வினாவினாள். "இறைச்சியா நான் எப்ப போனன் இறைச்சி வாங்க" என்று அவன் மறுபடியும் கேட்டதும் அன்ன மேரிக்கு தூக்கி வாரி போட்டது. அய்யாத்துரையின் சத்தம் வேறு வெளியே கேட்டு விட்டதோ என்று கவலை ஒரு பக்கம். அவள் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொல என்று கொட்டியது. கண்கள் சிகப்பாயின, தலைமுடியை சுத்தி கொண்டை போட்டாள். லுங்கியைத் தூக்கி செருகினாள். அவள் விழிகள் அகல விரிந்து கடுங் கோபப் பார்வை அய்யாத்துரையை நோக்கிப் பார்க்க சுசந்தன் ஓடி வந்தான். "அம்மா, எங்கட சேர் போய்ட்டு வாறாராம், உங்கள வரட்டாம்" என்றான். கண்களை துடைத்துக் கொண்டு அவசர அவசரமாக வீட்டுக் குள் வந்தாள் வாத்தியாரை மதிப்பதற்காக. ஆனால் சங்கராபரணம் வாத்தியார் ஏற்கனவே எழுந்து கதவண்டை வந்து விட்டார்.

**மீண்டும் வருவான்....**

**(சா(ஐ)ஹான்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தை 16ம் பெனடிற்றின்

## திருப்பயணத்திற்கு ஆஸ்திரியாவில் ஒன்பது வாரங்கள் நவநாள் தயாரிப்பு

திருத்தந்தை 16ம் பெனடிற் 2007 செப்டம்பர் 8ம் நாள் தேவதாயின் பிறப்புப் பெருநாளை ஆஸ்திரிய நாட்டிலுள்ள மரியன்னை திருத்தலத்தில் கொண்டாடச் செய்யும் விதமாக ஒன்பது வார நவநாள் தயாரிப்புக்கு ஆஸ்திரிய ஆயர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. இந்தத் திருத்தலத்தின் 850வது ஆண்டு விழாவில் திருத்தந்தை கலந்து கொள்கின்றார். லூக்காஸ் நற்செய்தியையும் திருத்தூதர் பணியையும் மையப்படுத்தி நவநாளுக்குத் தயாரிக்கும்படி விசுவாசிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விழாவில் திருத்தந்தையும், ஆஸ்திரியாவில் உள்ள பங்குகளின் பங்குப் பேரவை உறுப்பினர்கள் 30 ஆயிரம் பேரும் திருப்பலியில் கலந்து கொள்வர்.



“மரியா செல்” என்ற திருத்தலம் உள்ள ஊரில் இரண்டாயிரம் விசுவாசிகள் உள்ளனர்.

### சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி – 04

பரிசு பெறுவோர்

1ம் பரிசு 300/=
விஸ்வாசம்பிள்ளை
மெலின்டா நிலுசிக்கா
31, பாரதி வீதி
தாண்டவன் வெளி
மட்டக்களப்பு

2ம் பரிசு 200/=
P.டெல்ஜினியா
இல. 47 பாடசாலை வீதி
திருகோணமலை

3ம்பரிசு 100/=
தேவநாதன் தேவிமலர்
சின்னமுகத்துவாரம்
இரட்சகர் புரம்
அக்கரைப்பற்று- 09



கிரேக்க இலக்கியங்களில் சூரியக் கடவுளாக வணங்கப்படுபவர் அப்பல்லோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு



நமதாண்டவர் இயேசு இவ்வுலகில் நிறைவேற்ற வந்த மீட்புப் பணியிலே அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பன முக்கியம் பெறுகிறது. நான்கு நற்செய்திகளிலும் இவை கூறப்பட்டுள்ளன. நாம் அனுபவிக்கப் போகும் பாடுகள், மரணம் பற்றி இயேசு பல முறைகளில் மறைமுகமாகவும், மூன்று முறை வெளிப்படையாகவும் கூறியுள்ளார். பாவத்தில் இருந்து மனுக்குலத்தை மீட்டு, மீண்டும் இறைவனுடன் ஒப்புரவாக்கவும், அவனுக்கு இறை அன்பினை வெளிப்படுத்தவும், தந்தையின் சித்தத்தை நிறைவேற்றவும் , தந்தைக்குக் கீழ்ப்படியவுமே இயேசு பாடுகள், மரணம் என்பவற்றினை ஏற்றுக் கொண்டார். ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினால் பாவம் உலகில் நுழைந்தது போல், இந்த ஒரு மனிதரின் கீழ்ப்படிவினால் முழு உலகுமே புத்துயிர் பெற்றது. மனுமகனாகிய கிறிஸ்து தன் இரத்தத்தினால் நம்மை விலை கொடுத்து வாங்கியுள்ளார். (1 கொரி 6:20) இவ்வாறு கிறிஸ்து தன்பாடுகள் மரணத்தினூடாக இறைவனின் அளவிட முடியாத அன்பினை உணர்த்துகிறார். நாம் பாவிகளாய் இருந்தும், கிறிஸ்து நம்மீதுள்ள அன்பினால் நமக்காகத் தன்னுயிரையே பலியாக்கினார். இதனால் இறைவன் எம்மீது கொண்டுள்ள அன்பு எத்தகையது என்பது புலனாகிறது.

மேலும், இயேசுவின் பாடுகள் மரணத்திலே பலவகைப்பட்ட சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இயேசுவுக்கு எதிராகச் சதித்திட்டம் இடம்பெறுகிறது. பாடுபடுவதற்கு முந்திய நாள் இயேசு தான் தெரிந்து கொண்ட யூதாஸ் எனும் சீடனால் காட்டிக் கொடுக்கப்படுகிறார். பல முறை அவனுக்கு இயேசு அவன் செய்யப் போகும் தவறினை உணர்த்தியும் அவன் திருந்தவில்லை. அவன் பணத்தின் மேல் கொண்ட ஆசையினால் இறைமகனையே காட்டிக் கொடுக்கத் தயங்கவில்லை. மற்றும் தான் அன்பு செய்த இன்னுமொரு சீடனாகிய பேதுருவினால் மறுதலிக்கப்படுகிறார். பேதுருவினிடத்தில் இயேசு தான் அனுபவிக்கப் போகும் பாடுகளைக் கூறியும் அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் அவர் தன்னை மறுதலிக்கப்போவதைக் குறித்தும் கூறுகிறார். தன் சீடன் செய்யப்போகும் தவறினை அறிந்தும் இயேசு அவரை வெறுக்கவில்லை.

மேலும், இயேசுவின் பாடுகள் மரணத்திலே அவர் பல்வேறுபட்டவர்கள் மத்தியில் விசாரிக்கப்படுவதைக் காண்கிறோம். தலைமைக்குருக்கள் பிலாத்து, ஏரோது இவ்வாறு பலராலும் விசாரிக்கப்பட்டு, பலரும் பல குற்றங்களைச் சுமத்தியும், பிலாத்து இயேசுவினிடத்தில் எந்தக் குற்றமும் காணவில்லை என்பதனால் அவரை விடுதலை செய்ய வழிதேடியும் இறுதியில் தோற்றுப் போகிறார். அவரை மரண தண்டனைக்கு ஒப்புவித்தார். மரணத்திற்குத் தீர்வையிடப்பட்ட இயேசு சாட்டைகளால் அடிக்கப்பட்டு , முள்முடி சூட்டப்பட்டு கல்வாரி மலை வரை சிலுவையைச் சுமந்து சென்று இறுதியில் சிலுவைச் சாவினை இரு கள்வர்கள் மத்தியில் ஏற்றுக் கொண்டார். ஆதி மனிதன் ஒரு மரத்தினால்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



செய்த பாவத்தினை , இயேசு சிலுவை மரமாகிய இன்னுமொரு மரத்தினால் வெற்றி கொண்டார். எனவே அவருடைய மரணம் எமக்கு ஒரு வெற்றி யாகவும் சவாலாகவும் அமைகிறது.

மேலும், கிறிஸ்துவின் உயிர்ப்பு, கிறிஸ்த வர்களாகிய எமக்கு மாபெரும் வெற்றியாக அமை கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பினைக் குறித்து நான்கு நற்செய்திகளுமே கூறுகின்றன. கிறிஸ்து உயிர்த்திராவிடின் எம் விசுவாசம் வீண். சாவை வென்ற கிறிஸ்து எமக்கு ஒரு மறு வாழ்வு உண்டு என்பதைக் காட்டி விட்டார். அவர் வழி சென்று நாமும் ஒரு நாள் உயிர்ப்போம் என்பது நிச்சயம். உயிர்த்த கிறிஸ்துவை யாரும் காணவில்லை. எனினும், கிறிஸ்து உயிர்த்த பின் பலருக்குக் காட்சி கொடுத்துள்ளார். வெறுமையான கல்லறையும், உயிர்த்த கிறிஸ்துவின் பிரசன்னமுமே அவருடைய உயிர்ப்பிற்கு ஆதாரமாகும். எந்தக் கடவுளுமே செய்திராத ஓர் உன்னத நிகழ்வினை நமதாண்டவர் நிறைவேற்றியுள்ளார். எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் நம் கிறிஸ்துவின் உத்தானத்தினை நினைத் துப் பெருமையடைவோம். இவ்வாறு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பன எமக்குத் தரும் படிப்பினைகளை ஏற்று, அந்த மீட்பிலே நாமும் பங்கெடுத்து, விசுவாசத்தின் வழியாக அவரில் ஒன்றித்திருக்க வேண்டும். ஏனெனில், கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலை கொடுத்து வாங்கப் பட்டவர்கள் நாம்.




உரோமைத் திருப்பலிப் புத்தகம், திரிதெந்தின் பொதுச் சங்கத்தின் ஆணைப்படி புனித ஐந்தாம் பத்திநாதரால் 1570ம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதனை ஏற்று கடந்த நான்கு நூற்றாண்டுகளாக, இலத்தீன் சடங்கு முறையில் குருக்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்து வந்தனர். 2ம் வத்திக்கான் பொதுச் சங்கம் திருப்பலியின் சீரமைப்புக்கு வழி கோலியது. 1969ம் ஆண்டு திருவருகைக் காலத்திலிருந்து புதிய திருப்பலிப் புத்தகம் நடைமுறைக்கு வந்தது. இதனை திருத்தந்தை 6ம் சின்னப்பர் வெளியிட்டார். பழைய இலத்தீன் வழிபாட்டு முறையில் திருப்பலி நிறைவேற்ற விரும்புகிறவர்கள் தல ஆயரிடம் தனி உரிமை ஆணையைப் பெற்றபின் நிறை வேற்றலாம் என்று திருத்தந்தை குறிப்பிட்டிருந்தார், ஆனால், தற்போது இலத்தீன் முறையில் திருப்பலி நிறைவேற்ற பொதுவான அனுமதி அளிக்க திருத்தந்தை 16ம் பெனடிக் விரும்புகிறார். இதற்கான அனுமதியை விரைவில் வழங்கவும் உள்ளார்.

**இலியட், ஒடிசி என்ற இரண்டு மாபெரும் கிரேக்க காவியங்களைப் படைத்த ஹோமர் ஒரு பார்வையற்ற கவிஞர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## ஆழியோன்

கலைஞர்கள் சமூகத்தின் கண்ணாடிகள்; இவர்கள் மக்களின் வாழ்வை பிரதிபலிப்பவர்கள். இதனால்தான் மன்னர்களின் ஆட்சிக்காலம் தொடக்கம் இன்றைய காலகட்டம் வரை கலைஞர்களுக்குத் தனியிடம் உண்டு.

கலைஞர்கள் உயிருடன் இருக்கும் போதே பாராட்டப்படவேண்டியவர்கள். மரணித்த பின் சிலை வைத்து என்ன பயன்? இவ்வகையில் நம் "தொண்டன்" குடும்ப உறுப்பினர், ஏன், குடும்பத் தலைமகனில் ஒருவரான மலர்வேந்தன் அவர்கள் அதாவது எஸ்.எஸ். யேசுதாஸ் அவர்கள் அண்மையில் பாராட்டப்பட்டார்கள்.

2006 டிசம்பர் மாதம் 17ம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று ஒரு பொன்னான நாள். ஆம்! அன்றுதான் மலர்வேந்தன் அவர்கட்கு பாராட்டு விழா இடம் பெற்ற நாள். திருகோண மலை - மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தின் ஒளி விழாவானது, நிலைய இயக்குனர் அருட்பணி. றொஹான் பேர்னாட் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது. ஆயர். அதி. வந். கிங்ஸ்லி சுவாம் பிள்ளை உட்பட குருக்கள் மற்றும் சமூகத் தொடர்பு நிலையத்துடன் தொடர்புள்ள பொதுநிலையினர் பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர். மலர் வேந்தன் அவர்கட்கான பாராட்டுப்பத்திரத்தை அருட்பணி றொஹான் அடிகளார் வாசித்துக் கையளித்தார். மறை மாவட்ட குருமுதல்வர் அருட் பணி. பொ. ஜோசப் அடிகளார் நினைவுச் சின்னத்தைக் கையளிக்க, திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அவர்கள் மலர்வேந்தனுக்கு பொன்னாடை போர்த்தினார்கள்.



சமூகத் தொடர்பு இயக்குனர் தனது தலைமையுரையில், மலர்வேந்தன் அவர்கள் 27 வருடங்களாக சமூகத்தொடர்பு சேவைத்துறையில் ஈடுபட்டுள்ளார். அவரின் வெள்ளி விழாவை நாம் சிறப்பாகக் கொண்டாடியிருக்கவேண்டும்; ஆனால், இன்றுதான் அவரைப் பாராட்டச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கலைஞர்கள் வாழும் போதே கௌரவிக்கப்படவேண்டும் என்றார்.

ஆயர் அவர்கள் தமதுரையில், மலர்வேந்தன் அவர்களைப் பாராட்டினார். கொழும்பில் இயங்கி வந்த கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிக்கான பிரிவு 83ம் ஆண்டு வன்முறையின் பின் மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் இருந்து இயங்கி வருகின்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சான்றிதழ் பெற்ற கலையகமாக எமது கலையகம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

மலர்வேந்தன் அவர்கள் 27 வருடங்களுக்கு மேலாக கலையுலகில் சிறப்பாகப் பணியாற்றி வரும் ஒருவர். புதிய உலகம் கத்தோலிக்க நிகழ்ச்சி, வெரித்தாஸ் வானொலியின் தமிழ் நிகழ்ச்சி, "தொண்டன் சஞ்சிகை' என்பன இவரின் அர்ப்பணிப்பால் மெருகு பெறுகின்றன. வானொலி அறிவிப்பாளர், ஒலிபரப்பாளர், சஞ்சிகை ஆசிரியர், நிர்வாகி, கவிஞர், எழுத்தாளர் என்ற பல்வேறு முகங்களைக் கொண்டவர்.

மிகவும் சிறப்பான உச்சரிப்பைக் கொண்டவர். "ழ" கரம் தொடர்பான இவரது உச்சரிப்பு பாராட்டத்தக்கது. கலைக் கூடத்தின் ஒலிப்பதிவுகள் நடக்கும் போது கலைஞர்களின் உச்சரிப்பு தொடர்பாக மிகவும் கவனத்துடனும், கண்டிப்புடனும் காணப்படுவார். எக்காரியத்தையும் திட்டமிட்டு செய்வதில் கெட்டிக்காரர்.


அருட்பணி. றொஹான் அடிகள் ஒரு தடவை மலர்வேந்தன் பற்றிக் குறிப்பிடுகையில் "தொண்டன் என்றால் இதோ மனிதன் என மலர் வேந்தன் அவர்களைச் சுட்டிக் காட்டலாம்" என்றார்.

பாராட்டு விழாவில் மலர் வேந்தன் அவர் ஏற்புரையாற்றுகையில் என்னுடைய வளர்ச்சிக்கு அனைவரினதும் ஒத்துழைப்புத்தான் காரணம், குறிப்பாக என்னை இனம் கண்டு, எவ்வித பிரதேச வேறுபாடும் இன்றி ஊக்க மளித்தவர் அருட்பணி, செல்வரெத்தினம் அடிகளார் (கரவையூர்ச் செல்வம்) ஆவார். அத்துடன் என்னை இங்கு பணியாற்ற அழைத்த ஆயர் கிங்ஸ்லி சுவாம் பிள்ளை ஆண்டகை அவர்கள், சமூகத் தொடர்பு நிலைய இயக்குனராகப் பணியாற்றிய குருக்கள், உடன் பணியாற்றுபவர்கள் - குறிப்பாக ஒலிப்பதிவுக் கலைஞர் ராஜேந்திரன் அவர்கள் எல்லாம் எனது நன்றிக்குரியவர்கள். இவர்கள் எல்லோரும் என்னுடன் தோள் கொடுத்தமையால்தான் என்னால் இயன்றளவு சிறப்பாகக் பணியாற்ற முடிந்தது என்றார்.

மலர்வேவந்தன் அவர்களின் பேச்சில் அவரது பணிவு தெரிந்தது. இதற்கிடையில் தொண்டனின் சில நிமிடங்கட்காக அவரைப் பேட்டி காண முற்பட்டோம். அவர் நாசுக்காக மறுத்து விட்டார். எனினும் விக்கிரமாதித்தன் போல எமது முயற்சி தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பதகளிப்புள்ளோரில் காணப்படும் விசேட பிரச்சினைகள்

பதகளிப்பு நோயினால் பாதிக்கப்பட்டவரில் பதகளிப்புடன் வேறு பிரச்சினைகளும் சேர்ந்து காணப்படலாம். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் எல்லோருக்கும் ஒரே வகையான சிகிச்சை முறைகளே பயன்படுத்தப்படுவதால் சிகிச்சை முறைகளை இறுதியாகப் பார்ப்போம்.

### பீதி நோய் (PANICATTACK)

பொதுவாக சிலர் சிறுவயது முதல் பயந்த சுபாவம் உடையவர்களாகக் காணப்படுவர். இது அவர்களது ஆளுமையைப் (Personality) பொறுத்தது. இவ்வாறானவர்கள் இயல்பாக பதகளிப்பு, பீதி நோய், அச்ச நோய் போன்றவற்றால் விரைவாகப் பாதிக்கப்படலாம். பீதி நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் குறித்தவொரு சம்பவத்தைத் தொடர்ந்து திடீரென அதி உச்சமான பயத்திற் குள்ளாதல் பீதி ஆகும். இத் தாக்கம் சில நிமிடங்கள் தொடக்கம் மணித்தியாலங்கள்வரை நீடிக்கலாம். பொதுவாக பதகளிப்பிற்குரிய அறிகுறிகள் அதிகமாகக் காணப்படும். இச் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர் பின்வரும் வெளிப்பாடுகளை வெளிக்காட்டுவர்.

- ❖ அதிக வியர்வை
- ❖ அதீத பதற்றம்
- ❖ அதீத படபடப்பு
- ❖ நெஞ்சுக்குத்து
- ❖ மயங்கி விழுதல்
- ❖ மாறாட்ட நிலை

### அச்ச நோய் (PITOBIC DISORDER)

குறித்த ஒரு பொருளிற்கு, குறித்த ஒரு நபரிற்கு அல்லது சூழலிற்கு அச்ச உணர்வு காணப்படலாம். இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் பொதுவாக இவ்வாறான சூழலை விலக்கியே வாழ முற்படுவர். சிறுவயது முதலே சில பெற்றோர் தமது பிள்ளைகளை அதை இதைக்காட்டி பயப்படுத்தி வளர்ப்பார்கள். இவ்வாறான பிள்ளைகள் வளரும் போது அவர்களில் இயல்பாகவே இவ்வறான பயங்கள் என்பன மனதில் குடியேறிவிடும். இச் சிறுவர்களின் உடல், உள ஆளுமை வெகுவாகப் பாதிக்கப்படும். பொதுவாக மேற்கத்தையவர்கள் (Europians) தமது பிள்ளைகளைச் சிறுவயது முதலே எல்லா ஆளுமைகளையும் கொடுத்து வீரியமானவர்களாக வளர்ப்பார்கள்; ஆனால் ஆசிய நாட்டவர்களில் இவ்வாறான பிள்ளை வளர்ப்பு வெகு குறைவு.

சுவாமி விவேகானந்தர் கூடச் சொல்லுவார்: "உங்கள் பிள்ளைகளிற்கு பயத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுக்காதீர்கள்; மாறாக, வேகம், விவேகம், துணிவு போன்றவற்றைச் சொல்லிக் கொடுங்கள். எ∴கு போன்ற தசைகளும் வஜ்ஜிராயுதம் போன்ற மனமும் உடைய வர்களாக அவர்களை உருவாக்குங்கள்".

எனவே, பிள்ளை வளர்ப்பில் மிக முக்கியமாக ஆளுமை விருத்திக்கு முதலிடம் கொடுக்க வேண் டும். அது கிடைக்கும் போது ஒரு குழந்தை பன்முக ஆளுமை (Multi Talantar Personality) உடைய பிள்ளையாக உருவெடுக்கும்.

அச்சநோய் உள்ளவர்களில் எதற்கு எடுத்தாலும் பயம் காணப்படும். "தெனாலி" படத்தில் கமலஹாசன் இதனை மிக இலகுவாக விளக்குகிறார்.

சிலருக்கு உயிரினங்கள் மீது அச்சநோய் காணப்படும். உதாரணமாக பாம்பு, எலி, கரப்பான் பூச்சி, பல்லி, சிலபேருக்கு வீட்டைவிட்டு வெளியேறுவது, சனத்திரளில் நிற்பது, மற்றவர்கள் முன் சாப்பிடுவது, மேடைகளில் பேசுவது, சோதனைக்குப் போவது (Social Phobias) போன்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர் பதகளிப்பு நோய்க்குரிய அறிகுறிகளையே வெளிக்காட்டுவார்.

### பதகளிப்பு, பீதி, அச்ச நோய்களிற்கான சிகிச்சை முறைகள்

இவ்வாறான நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரிற்கு உளநலம் சார்ந்த மருத்துவர் ஒருவரை அணுகுவது மிகப்பொருத்தமானது. எவ்வாறாயினும் மேற்படி நோயாளி வேறு உடல் நோய்களால் (Physical Diseases) பாதிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னரே குறித்த பிரச்சினையை கையாள வேண்டும். இங்கு சிகிச்சை முறையில்,

I. மருந்து, மாத்திரைகள் ((Medication)
II. சாந்த வழிச்சிகிச்சை ((Relexation Therapy)
III. ஆளுமைச் சிகிச்சைகள் (Supportive Therapy)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. நடத்தைச் சிகிச்சைகள் (Behavior Therapy) என்பன பயன்படுத்தப்படும்.

**மருத்துவ சிகிச்சை (Medications)**

கடுமையான பயம், கவலை என்பவற்றிற்கு குறுகிய காலத்திற்கு Benzodiazepine வகைக்குரிய மருந்துகளானDiazepam, Lorazepam, Clorazepam என்பவற்றை வைத்தியரின் ஆலோசனையின் படி எடுக்கவேண்டும்.

இம்மருந்துகள் அதிக நித்திரையை ஏற்படுத்துவதால் இரவில் மட்டும் எடுப்பது நன்று. அத்துடன் சாரதிகள், படையினர், கனரக இயந்திரங் களைக் கையாள்பவர்கள் மிக அவதானத்துடன் செலுத்துதல் நன்று.

மேலும், இம்மாத்திரைகளிற்கு வாய் உலருதல், சோர்வு, தூக்கக் குணம் என்பன காணப் படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் வைத்தியரின் ஆலோசனையின் படி மாத்திரைகளின் அளவை மாற்றி எடுக்கலாம். அத்தோடு நீராகாரங்களை அதிகம் அருந்துதல் நன்று.

சிலபேருக்கு பதகளிப்பு, பயம், அச்சம், பீதி ஆகிய நோய்களுடன் உளச்சோர்வு (Depression) மெய்ப்பாட்டு வெளிப்பாடு (Somataform disorders) என்பனவும் சேர்ந்து காணப்படலாம். இவர்கள் (Anti depresants) வகைக்குரிய மருந்துகளைக் கட்டாயம் பாவிக்கவேண்டும்.

**சாந்த வழிமுறைகள் (Relaxation Therapy)**

குறுகிய கால மருத்துவ சிகிச்சையோடு சாந்த வழிமுறைகளைப் பின்பற்றுவதே மிகவும் பயனுடைய சிகிச்சை முறையாகும். இதன்மூலம் மனம் அமைதியடையவும் போதிய தூக்கத்தைக் கொண்டு வரவும் சந்தோசத்துடன் வாழவும் இச்சாந்த வழிமுறைகள் மிகவும் பயனுடையதாக இருக்கும். இது நோயாளர்கள் மட்டுமன்றி சாதார ணமானவர்கள் கூடச் செய்யலாம்.

இன்றைய இயந்திர வாழ்க்கைக் காலத்தில் பொதுவாக எல்லோருமே மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் பெரும்பாலான வர்களில், கோபம், படபடப்பு, பொறுமையின்மை, அந்தரம், நித்திரையின்மை, பசியின்மை, அமைதி யின்மை, சந்தோசமின்மை, தீய பழக்கவழக்கங்கள் போன்றவை மேலோங்கி வருகின்றன. எனவே அனைவரும் யோகாசனம், தியானம் போன்ற கலை களைக் கட்டாயம் பழகி நீண்டு நிலைத்த ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிப்படுத்த வேண்டும். இச்சாந்த வழிமுறைகளில் பொதுவாக நாங்கள் சொல்லிக்கொடுப்பது

I மந்திர உச்சாடனம் (Manmras)
II மூச்சுப்பயிற்ச்சி (Breathing exersise)
III தேகத்தை பிடித்துவிடல் ( Massaging)
IV தியானம் (Meditation)
V சாந்தியாசனம் (Santhiyasana)

**மந்திர உச்சாடனம்:**

ஒரு சொற்றொடரைத் திருப்பித்திருப்பிச் சொல்லுவது மந்திர உச்சாடனம் ஆகும். இதன் மூலம் மனம் சாந்தியடையவும், அமைதியடையவும் உதவும். ஒவ்வொரு மதத்தவரும் தம் தம் மதத்தி னுடைய சொற்றொடரை (இலகுவான) பாவிக்கலாம். அமைதியாக ஓரிடத்தில் இருந்து 100 வரையிலாவது இச் சொற்றெடர்களைச் சொல்லவேண்டும்.

இந்து சமயத்தவர்கள் "ஓம் நமச்சிவாய" அல்லது "திருச்சிற்றம்பலமே" என்ற சொற் தொடர் களைப் பாவிக்கலாம். இஸ்லாம் மதத்தைச் சார்ந்த வர்கள் "இலாகி லாலா இல்லல்லா" என்ற சொற் தொடரையும், கிறிஸ்தவர்கள் (கத்தோலிக்கர், கத்தோலிக்கர்கள் அல்லாதவர்கள்) "இயேசுவே இரட்சியும்" என்ற சொற்றொடரை உச்சரிக்கலாம்.

பொதுவாகக் கத்தோலிக்கர்கள் செபமாலை சொல்வது மந்திர உச்சாடனத்திற்கு ஒப்பாகும். ஆனால், இன்று குடும்பச் செபமாலை சொல்லும் பழக்கம் தொலைக்காட்சி 'மெகா தொடர்'களால் தொலைந்து போய்விட்டது.

**மூச்சுப்பயிற்ச்சி (Breathing exersise)**

மனம் அமைதியற்று அலைக்கழியும் போது இயற்கையாக நடைபெறுகின்ற சுவாசமும் ஒழுங்கற்றதாக நடைபெறும். இதனால் உடலிற்கு போதிய 'ஒட்சிசன்' கிடைக்கப்பெறாமல் உடலில் பல மாற்றங்கள் நிகழும். ஒருநிலையில் அதிபரசுவாச நிலை (Hyperventilation Syndrom) கூட ஏற்படலாம். இது மயக்க நிலையைக் கூட தோற்றுவிக்கலாம்.

சுவாசத்தை ஒழுங்காகவும், ஆழமாகவும் நெறிப்படுத்துவதனால் மேற்குறிப்பிட்ட உடல், உள மாற்றங்களை எதிர்த்து மனச்சாந்தியை ஏற்படுத் தலாம்.

இப்பயிற்சியின் போது இறுக்கமற்ற ஓர் ஆசனம் அல்லது இருக்கையை தெரிவு செய்யலாம். 'யோகாசனம்' செய்து அனுபவமுள்ளவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மாசனம், சித்தாசனம், வஜ்ராசனம், வீராசனம், சுகாசனம் இதில் ஏதாவது ஒரு முறையில் வசதியாக இருந்து கொள்ளலாம். ஆசனம் போட முடியாதவர்கள், கதிரை ஒன்றில் முள்ளந்தண்டு நேராக இருக்க இருந்து கொள்ளலாம். கண்களைப் பொதுவாக மூடி மனக்கண்ணை மூக்கு நுனிக்குக் கொண்டு வந்து அங்கு உட்சென்று வெளியே வருகின்ற சுவாசத்தை அவதானிக்கவும்.

பொதுவாக நாம் சுவாசிக்கும் போது எமது மார்புப் பகுதி பாவிக்கப்படுவதை அவதானிக்கலாம். ஆனால், இப்பயிற்சிக்கு வயிற்றுப்பகுதியைக் கூடுதலாகப் பாவிக்கப் பழகுதல் நன்று. வயிற்றுப் பகுதித் தசைகளும் மார்புத் தசைகளும் விரிவடைவதனால் காற்று உட்செல்வதனை அவதானிக்கலாம். சுவாசத்தை உள்ளெடுக்கும் போது மெதுவாகவும், தொடர்ச்சியாகவும், ஆழமாகவும் எடுக்கவும். பின்னர் வயிற்றுத்தசையையும், மார்புத் தசைகளையும் தளர்வடைய விடுவதனால் வெளிச்சுவாசம் தானாகவே இலகுவாக வெளியேறும். இதனை ஆறுதலாகவும், மெதுவாகவும் செய்யவும். இந்த வேளைகளில் வேறு சத்தங்கள் குறுக்கிடாமல் பார்த்துக்கொள்ளவும். இவ்வாறு உட்சென்று வெளி வருகின்ற சுவாசத்தை சில நிமிடங்கள் அவதானிக்கவும், படிப்படியாக நேரத்தை அதிகரிக்க முயற்சி செய்யவும்.

**சாந்தியாசனம்**

(படிப்படியாக தசைகளைத் தளரச் செய்யும் பயிற்சி)

இது மிகவும் பயனுடைய ஆசனமாகும். மனோரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி சாமானியர்களும் இப்பயிற்சியை மேற்கொள்ள முடியும். இதன்மூலம் நல்ல நித்திரை, உடல் நோவுகள் நீங்கிய உற்சாக நிலை என்பன தோன்றலாம்.

நெருக்கீட்டு நிலையில் தசைகளின் இறுக்கம் தொடர்ந்து இருப்பதனால் உடல் ரீதியாக சில அறிகுறிகள் தோன்றலாம். உதாரணமாகத் தலையிடி, கபாலக்குத்து, பிடரி, கழுத்துநோ, களைப்பு மேலும், பயம், பதற்றம், அந்தரம், திடுக்கிடுதல் போன்ற அறிகுறிகள் தென்படலாம். இவற்றிற்கு சாந்தியாசனம் அருமருந்தாகும்.

அமைதியான ஓரிடத்தில் ஒரு விரிப்பில் அல்லது படுக்கையில் மல்லாந்து படுத்து கொள்ளவும். கால்களை, கைகளை அகல விரித்து நீட்டியபடி கண்கள் மெதுவாக மூடி மேல்நோக்கிப் பார்த்தபடி - இந்நிலையை யோகாசனத்தில் சவாசனம் (Savasana) என்று சொல்வார்கள். அதாவது "பிரேதம்" போல் கிடந்து மெதுவாக மூச்சை உள்ளெடுத்து வெளிவிட வேண்டும்.

மனதை மெல்லத் திருப்பி பாதங்களிற்குக் கொண்டு வந்து பாதம் முதல் தலைவரை உள்ள ஒவ்வொரு உறுப்புகளாக நினைந்து......

உதாரணமாக:- வலது பாதமே அதில் உள்ள ஒவ்வொரு உள்ளுறுப்புகளோடு என்புகளே, தசைகளே, குருதிக் குழாய்களே, நரம்புகளே, நீங்கள் ஒவ்வொன்றும், உங்கள் உங்கள் தொழில்களைச் சரிவரச் செய்து ஆரோக்கியத்தோடும், சுகத்தோடும், பலத்தோடும் இன்றுபோல் என்றும் இருப்பீர்களாக, ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என்று மூன்று தடவை சொல்லி வலது பாதத்தைத் தளர்த்திவிட வேண்டும். இவ்வாறாக எமது உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புகளையும் வலது, இடது என்று சொல்லி தனித் தனியாகத் தளர்த்திவிடலாம்; அல்லது பொதுவாக சேர்த்துத் தளர்த்திவிடலாம். பாதங்கள், முழங்கால், தொடை, இடுப்புப்பகுதி, இடுப்புக்குழி, நாடிப்பகுதி, வயிற்றுப்பகுதி, முதுகுப்பகுதி, நெஞ்சுப்பகுதி, நெஞ்சறைக் குழி, கழுத்துப்பகுதி, முகப்பகுதி (கண், காது, வாய், மூக்கு) தலைப் பகுதி, மூளைப் பகுதி என்று ஒவ்வொரு உள்ளுறுப்பாக நினைத்து அவற்றைத் தளர்த்தி விடவேண்டும்.

இவ்வாறு தளர்த்தும் போது முன் தளர்ந்த அங்கங்களைத் திரும்ப இறுக்காது, தொடர்ந்து தளர்வுற்ற நிலையில் வைத்திருக்கவும். முதலில் முழுச் சரீரமும் தளர்ந்த நிலையில் ஒரு பிரேதத்தைப் போல் இருக்க வேண்டும். உதாரணமாக காலை மேலே தூக்கிவிட்டால் அது மரக்கட்டைபோல் விரிப்பில் விழ வேண்டும்.


இறுதியில் முழு உடலும் அமைதியுள்ள நிலையில் சில நிமிடங்கள் சாந்தமான மன அமைதியை ரசிக்கவும். நித்திரை வரலாம். நித்திரை கொள்வது தவறன்று. ஆனால் பயன் குறைவு. நித்திரையின்றி இருப்பதே சிறந்தது.

இன்றைய இயந்திரமான வாழ்க்கைக் காலத்தில் சாந்தியாசனம் சகலருக்கும் ஒரு Tonic ஆக அமையும்.

— Dr. ஜூடி ரமேஷ் ஜெயக்குமார் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கம்பியூட்டரால் கண்கள் பாதிக்கப்படுமா?

கம்பியூட்டர் முன் தொடர்ந்து அமர்ந்து வேலை செய்யும் போது கண்கள் தொடர்ச்சியாக மொனிட்டரையே பார்த்துக் கொண்டிருப்பதால் விழிப்படலம் சீக்கிரம் வறட்சியாகி விடும். இதனால் கண்கள் சிவந்து விடும். கண் அசதி, தலைவலி போன்ற தொல்லைகள் வரும். விரைவிலேயே தூரப்பார்வைக் கோளாறு வந்து விடலாம். சிலருக்குத் தலைச் சுற்றல் வரலாம். இந்தக் கோளாறுக்குக் கணினிப் பார்வை நோயியம் (Computer Vision Syndrom) என்று பெயர்.

சில ஆலோசனைகள்

1. கம்பியூட்டர் விளையாட்டுக் களுக்கு ஒதுக்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்ள வேண் டும்.

2. கம்பியூட்டர் மொனிட்டரைத் தொடர்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருக்காமல் அவ்வப் போது பார்வையை வேறு திசைக்குத் திருப்ப வேண் டும்.

3. மொனிட்டரைக் கூர்ந்து கவனிக்கும் போது கண் இமை களை அவ்வப்போது மூடி மூடித் திறக்க வேண்டும்

# நினைத்துப் பார்க்கின்றோம்...



எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ஜெயம் அண்ணன் அவர்கள் (செல்லத்துரை ஜெயராஜா) மறைந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்ற (21.02.2007) இவ்வேளையில் அவரோடு பழகிய நாட்களை, அவரது பணிகளை, அவர் வழங்கிய ஒத்துழைப்பை நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம்.

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பலவிதங்களிலும் பணிபுரிந்த அவர் குறிப்பாகக் கலை இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கினார்.

மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக் குழுவில் உறுப்பினராகவும், தொண்டன் சஞ்சிகை ஆசிரியர் குழுவிலும் இணைந்து பணிபுரிந்த அவர் கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிக்காக ஏறத்தாள முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நாடகங்கள், சிந்தனைகள் என பல தரப்பட்ட நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார். ஒரு காலத்தில் மேடை நாடக நடிகராக விளங்கிய அவர், பிற்காலத்தில் அவசரத் தேவைகளுக்காக தம்மை நாடிவந்த பலருக்கும் பல மேடை நாடகப் பிரதிகளை எழுதி வழங்கியதை அறிவோம். கல்லாறு Y.M.C.A, நமது மறை மாவட்ட C.Y.A, போன்றவையும் அவரது பணியால் பயனடைந்தவை.

தமது இறுதிக்காலம் வரை பக்தியோடும், பணியார் வத்தோடும் விளங்கிய அவருக்கு இறைவன் நித்த அமைதியும் நிலை வாழ்வும் அளித்திட பிரார்த்திப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருவழிபாடு

ஆதியில் மனிதன் தன்னிலும் விட மேலான ஒருவராகிய இறைவனைத் தேடி, அவரது அடையாளமாகக் காணப் பட்டவற்றுக்கு வணக்கம் செலுத்தினான்; இறைவனுக்கு ஆராதனை செலுத்தினான்.

முற்காலத்திலிருந்தே இறைவனுக்குப் பலி செலுத்தும் பண்பு நடைமுறையில் இருந்துவந்துள்ளதென்பதை வேதகாமத்தில் ஆபேல், காயின் கதையிலிருந்து அறியலாம். ஆபேலின் காணிக்கையை இறைவன் ஏற்றுக்கொண்டார்.

ஆபிரகாம் இறைவனுக்குப் பலி செலுத்தினார். தனது மகனைத் தகனப் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு முன்வந்தார். மோசே, ஆரோனின் பரம்பரையினருக்குப் பலி ஒப்புக் கொடுக்கும் பொறுப்பை வழங்கினார். இவர்கள் மிருகங்களையும், தம் உழைப்பால் கிடைத்த காய், கனி, தானியங்களையும் ஒப்புக்கொடுத்தனர்.

காணிக்கை செலுத்துவதில் புதுத் திருப்பத்தை யேற்படுத்தியவர் கிறிஸ்துவே. அவர் தாமே குருவாகவும், பலிப் பொருளாகவும் மாறித் தம்மையே பிதாவுக்குக் கையளித்தார். அன்று கல்வாரியில் ஒப்புக்கொடுத்த பலியை, இன்றும் திருப்பலியில் அப்ப, இரச வடிவில் கிறிஸ்து தந்தைக்கு ஒப்புக் கொடுக்கிறார்.

அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி கூறி அதைப்பிட்டுத் தம் சீடருக்கு அளித்துக் கூறியதாவது "இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்"

கிறிஸ்துவின் கட்டளைப்படி இன்றைய திருப்பலி அன்றைய சிலுவைப் பலியைப் பிரதிபலிக்கின்றது; அதனால், இன்று திருப்பலி கிறிஸ்தவ திருவழிபாட்டின் மையமாக வுள்ளது.

திருவழிபாடு என்றால், முழு உலகையும் படைத்த இறைதந்தைக்கு இறைமக்கள் ஒன்று கூடிச் செலுத்தும் ஆராதனையாகும். திருவழிபாட்டின் விசேட அம்சம் திருப் பலியாகும்.

திருச்சபை திருப்பலியை ஓர் அதிகாரபூர்வ வழி பாடாகக் பலவித சடங்கு முறைகளையும், அடையாளங்க ளையும், செபங்களையும் பயன்படுத்துகிறது. திருப்பலியை நிறைவேற்ற திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களையும் நியமித்துள்ளது.

**திரு வழிபாட்டின் மையமான திருப்பலி**

திருப்பலி இறைவனுக்கு அளிக்கப் படும் உயர்ந்த ஆராதனையாகவும், நன்றி செலுத்தும் ஊடகமாகவும் அமைகிறது. இவ்வாறு கல்வாரிப்பலி நிறைவேற்றப் படுகின்றது.




அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் திரு உடலாகவும், இரத்தமாகவும் மாற்றப்பட்டு இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கப்படுகின்றன.

திருப்பலியின் ஒழுங்குமுறை:

1. ஆரம்ப வழிபாடு
2. இறைவார்த்தை வழிபாடு
3. நற்கருணை வழிபாடு
4. நன்றி வழிபாடு

**1. ஆரம்ப வழிபாடு**

இதில் பாவமன்னிப்புப் பெறுகிறோம். நம் தவறுகளையேற்று, மனம் வருந்தி, மன் னிப்புப் பெற்று, சமாதானமான உள்ளத்தோடு பலியில் பங்குகொள்ள ஆயத்தமாகிறோம்.

**2. இறைவார்த்தை வழிபாடு**

இப்பகுதியில்

1. முதல்வாசம் (பதிலுரை)
2. 2ம் வாசம் (அல்லோலுயா பாடல்)
3. நற்செய்தி
4. மறையுரை, விசுவாசிகள் மன்றாட்டு

என்பன அடங்குகின்றன.

இறைவன் நம்மோடு பேசுகிறார்; இறை வார்த்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருள்ளவை; குருவானவர் விளக்கம் தருகிறார் மறையுரையில்.

**3. நற்கருணை வழிபாடு**

திருப்பலியின் பிரதான பகுதி இதுவாகும். கிறிஸ்து கடைசி இரவில் நிறை வேற்றிய வழிபாடு மீண்டும் உயிரூட்டம் பெறுகிறது.

அப்பத்தையெடுத்தல் - காணிக்கை ஒப்புக் கொடுத்தல்

நன்றி கூறுதல் - வசீகர வார்த்தைகளும் நன்றி கூறுதலும்

அப்பத்தைப் பிட்குதல் - அப்பத்தை உடைத்தல், திருத்தூதருக்கு வழங்குதல் - நற்கருணையை வழங்குதல்.

இந்த மேலான வழிபாட்டில் கிறிஸ்து பிரசன்ன மாகிறார்.

**4. நன்றி வழிபாடு:**

இறைவன் தந்த நிறைவுக்கு நன்றி தெரிவிக் கப்படுகிறது.

**திரு வழிபாட்டின் வேறு வடிவங்கள்**

**1. திருவருட்சாதனங்கள்:**

திருச்சபை கிறிஸ்துவின் பெயரால் மக்களுக்குத் திருவருட்சாதனங்களை வழங்கு கிறது. இவற்றின் மூலம் இறைவனுக்கு உகந்த வர்களாக மக்களை மாற்றுகிறது; புனிதப்படுத்து கிறது.

**2. இறை புகழ் பாடுதல்:**

திருச்சபை அதிகார பூர்வமாக இறைவனுக் குச் செய்யும் புகழ்ச்சியாகும். சங்கீதங்களும், விசேட செபங்களும் இதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் பொது நிலையினரும் பங்கு பற்றிய நிலை பின் மாறி குருக்களும், துறவிகளும் ஒரு நாளில் குறிப்பிட்ட நேரங்களில் இதனைப் பயன் படுத்துகின்றனர்.

இவ்வாறு ஒன்றிணைந்து இறைவனுக்கு நன்றி கூறுகையில், அவரோடு ஒன்றிக்கிறோம். திரு வழிபாட்டில் உன்னத செயலாக அமைவது எல்லோ ரும் இணைந்து ஆராதனை செய்வதே.


- மெற்றில்டா -

# சுதந்திரத் திருநாடு

எங்கே மனம் அச்சமற்று இருக்கிறதோ
எங்கே தலைநிமிர்ந்து நிற்கிறதோ
எங்கே அறிவு கட்டுத்திட்டற்று இருக்கிறதோ
எங்கே உலகம் குறுகிய குட்டிச்சுவர்களால்
துண்டு துண்டாக உடைந்திருக்கவில்லையோ

எங்கே சொற்கள் வாய்மையின்
ஆழத்திலிருந்து வருகின்றனவோ
எங்கே அயரா உழைப்பு தன் கைகளை
நிறைவு நோக்கி நீட்டுகின்றதோ,
எங்கே அறிவெனும் தெளிநீரோடை
செத்த பழக்கம் என்னும் வறண்ட பாலையில்
தன் ஓட்டத்தை இழந்து விடவில்லையோ

எங்கே மனம் எக்காலும் விரிந்து செல்லும்
எண்ணம் செயலில்
உன்னால் முன்னோக்கி நடத்தப்படுகிறதோ
அந்த விடுதலை விண்ணகத்தில்
எந்தையே என்நாடு விழித்தெழ அருளுக!



- இராவீந்திரநாத் தாகூர்
கீதாஞ்சலி 35

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கி.மு. 5ம்** நூற்றாண்டிற்கு முன்பே எங்கள் முன்னோர் நனி நாகரிகராக மட்டக்களப்புத் தமிழகத்தில் வாழ்ந்தமையை அதன் ஒரு பகுதியான கதிரவெளியிலும், கட்டுமுறிவிலும் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் ஆய்வுத்தடயங்களும், வரலாற்றுக் குறிப்புகளும் எடுத்துக்காட்டியுள்ள அதேவேளை அப்புராதன மக்கள் பேசிய தமிழ்ச் சொற்கள் சில இன்றும் மங்காமல் மறையாமல் அவர்கள் சந்ததியினரின் நாவில் நடமாடுகின்றமையும் அச்சொற்கள், தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பரிபாடல், கலித்தொகை முதலான சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றமையும், மட்டக்களப்புத் தமிழகத்தாரின் தொன்மையை நிரூபிக்கப் போதுமானவை என்பதில் இரு வேறு கருத்துக் களுக்கு இடமில்லை.




இதனை 'மட்டக்களப்புத் தமிழகம்' ஆசிரியர் பண்டிதர். வி.சீ. கந்தையா அவர்களின் பின் வரும் கூற்று அணி செய்யும். ஒரு நாட்டின் பண்டைய வரலாற்றை அறிவதற்குப் புத்தகங்களும் செய்யுள்களுந்தான் வேண்டுமென்பதற்கில்லை. அந் நாட்டு மொழி அல்லது சொல் கூட வரலாறுரைக்கும் பெருங்கருவியாய் அமையும். (மட்டக்களப்பு தமிழகம் பக்.86)

மட்டக்களப்புத் தமிழகத்தாருக்கும் தமிழ்நாட்டின் சங்ககால(கி.மு.500-கி.பி-200) மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்பதற்கு அவர்கள் வாழ்ந்த காலமும் (கி.மு.5ம் நூற்றாண்டு) பழந்தமிழ் சொற்களும் சான்றாக அமைவன. அச்சொற்களை ஆதாரத்தோடு இங்கே எடுத்துக் காட்டுவதற்கு முன் மட்டக்களப்புத் தமிழகத்தின் பழமை வாய்ந்த தமிழ்மொழி பற்றி இந்நூற்றாண்டின் தமிழறிஞர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம்.

பண்டிதர். வீ. சீ. கந்தையா அவர்கள் மட்டக்களப்பு மண்ணின் மைந்தர்; தமிழறிஞர். மண் மீது உள்ள அளவு கடந்த பற்று, மதிப்புக் காரணமாக அதன் பல்வேறு சிறப்புக்களையும் வரலாற்றுத் தன்மைகளையும் மட்டக்களப்புத் தமிழகம் எனும் நூல் வடிவில் கொண்டு வந்தவர்; அவர் சொல்லுகிறார்:

மட்டக்களப்புத் தமிழகம் தனது பழைய செஞ்சொற் செல்வத்திற் சிறந்து நிற்பதை அறிந்து மகிழுகின்றோம்... தமிழ்நாடு மறந்து விட்ட எத்தனையோ தண்தமிழ்ச் சொற்கள் இங்குள்ள பொதுமக்களின் பேச்சிலே வழங்குகின்றன. பழமையான தோற்ற வடிவுகளும், உயர்ந்த இலக்கியப் பொருளும் கொண்ட சொல்வழக்குடையார் இந் நாட்டு மக்கள். இவர் தம் பேச்சு வழக்கிலுள்ள பல சொற்கள் மொழி ஆராய்ச்சியாளருக்கும் நல் விருந்தாய் அமைந்து நடக்கின்றன. (மட்டக்களப்புத் தமிழகம்- பக் 86)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் போராசிரியர். ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்புத் தமிழின் சிறப்பியல்புகளைப் பற்றி இவ்வாறு தெரிவிக்கின்றார்.

மட்டக்களப்புத் தமிழகம் சமீபகாலம் வரையில் பிறபகுதி மக்களோடு தொடர்பு கொள்ளாத முறையில் வாழ்ந்து வந்ததால் அவர்கள் மொழி தன்னியல்புகள் சிலவற்றைக் கொண்டு விளங்குகிறது... மட்டக்களப்புத் தமிழ்ச் சொற்களையும் மலையாளச் சொற்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது மட்டக்களப்புச் சொற்களில் சில மலையாளத்தில் மட்டும் வாழ்வது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்பர். (மட்டக்களப்பு பிரதேச சாகித்திய விழா நினைவு மலர்- 1993)

மேலும், போராசிரியர் அவர்கள் கூறுகையில்: மட்டக்களப்புத் தமிழே மிகவும் செந்தமிழ்ப் பண்புடையது என்னும் கருத்து 1966ம் ஆண்டில் கமில்சுவெலபியினால் (KAMIL ZVELEBIL) வெளியிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்புத் தமிழ் செந்தமிழாகப் போற்றப்படுவதற்கு ஒரு காரணம் அத்தமிழிலே வடமொழிக் கலப்பு மிகவும் குறைவு ( மட்டக்களப்பு மாநாடு நினைவு மலர்.1976) என்பார்.

மட்டக்களப்புத் தமிழின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் போராசிரியரின் அக் கருத்துக்கள் பெறுமதி மிக்கவை. இதனை மனத்தில் இருத்திக் கொண்டு பழந்தமிழ் இலக்கியத்தில் பரந்து காணப்படும் மட்டக்களப்புத் தமிழின் பக்கம் நமது பார்வையைத் திருப்புவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் தோன்றிய அனைத்து நூல்களிலும் காலத்தால் முந்தியது தொல்காப்பியம் (கி.மு.3ம் நூற்றாண்டு) என்பர். இத்தகு சிறப்பிற்குரிய இந்நூலில் காணப்படும் சொற்கள் சில இன்றும் மட்டக்களப்புத் தமிழில் உயிர்த்துடிப்போடு உள்ளமை பலருக்கும் ஆச்சரியம் தருவதாகும். எனினும், ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல இச்சொற்கள் மட்டக்களப்புத் தமிழின் தொன்மையை நிரூபிப்பதோடு, மட்டக்களப்பிற்கும் தமிழகத்திற்குமிடையே இருந்திருக்கக்கூடிய உறவையும் சுட்டிக்காட்டும்.

மட்டக்களப்புத் தமிழகத்தாரின் நாவில் பயின்று வரும் தொல்காப்பியர் காலச் சொற்களில், கா, அதர், குடி, மருங்கு, மறுகா, கரப்பு, அரவம் (சத்தம்), செக்கல், யாமம்(சாமம்), கடுவன் என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றில் 'கா' என்பது ஓர் அசைச்சொல்லாகும். இதனைத் தொல்காப்பியம்

**யா,கா, பிற, பிறக்கு,அரோ, போமாது என வரூஉம்**
**ஆயேழ் சொல்லும் அசை நிலைக்கிளவி**
(சொல் இடையியல்)

என்று வரிசைப்படுத்தும். இவ்வகைச் சொற்களில் 'கா', மட்டக்களப்புக் கிராமங்களை இன்றும் சொந்தம் கொண்டாடும். வயதானவரை அல்லது தமக்கு மிகவும் நெருக்கமான ஒருவரைக் கண்டால், "எங்கா போறா? என்னகா பாடு?' என்று வினவுதல் வழக்கு. மட்டக்களப்புத் தமிழின் பேச்சுவழக்கை மட்டுமன்றி அவர்களது நாட்டுப்பாடல்களையும் இச் சொல் அழகூட்டும் என்பதற்கு,

**வாழைப்பழம் எடுகா, வம்பரையில் தேன் எடுகா**
எனும் பாடல் வரி ஒன்றே போதும்.

பழந்தமிழ்ச் சொற்களில் ஒன்றாகிய 'கா' கலித்தொகை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களையும் பல்லக்காகக் கொண்டுள்ளமைக்குப் பின்வரும் பாடல் அடிகளே தக்க சான்று.

பொய்யாமை நுவலும் நின்
செங்கோல் அச்செங்கோலின்
செய் தொழிற் கீழ்ப்பட்டாளோ இவள்?
இவள் காண்டிகா!
(மருதக்கலி)

காணிகா வாய்வதின் வந்த
குரவையின் வந்தீண்டும்
ஆய மட மகளிர் எல்லீருங் கேட்டீமின்
(சிலப்பதிகாரம்)

'அதர்' எனும் சொல் மட்டக்களப்பில் காட்டு வழியை அல்லது ஒற்றையடிப் பாதையைக் குறிக்கும். இச் சொல் தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகிய நூல்களில் இலங்குவதைப் பின்வருவன காட்டும்

தொகுத்தல் விரித்தல் தொகை
விரிமொழி பெயர்த்
ததர்ப்பட யாத்தலோடனை மரபினவே
(தொல்காப்பியம்)

ஆனினம் கலித்த அதர் பல கடந்து...
(புறநானூறு)

துவர் செய்யாடைச் செந்தொடை மறவர்
அதர் பார்த்தல் கும் அஞ்சுவரு நெறியாடை
(நற்றிணை)


கல் அதர்க்கவலை போகின்...
(அகநானூறு)

தூறு அதர் பட்ட ஆறு
மயங்கு அருஞ்சுரம்...
(கலித்தொகை)

மலைமாசு கழியக் கதழு மருவியிழியும்
மலி நீரதர் பல கெழுவு தாழ்வரை
(பரிபாடல்)

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையானுழை...**
(திருக்குறள்)

சேணோங்கியவரை அதரில்
பாணனை ஆற்றுபடுத்தன்று...
(புறப்பொருள் வெண்பாமாலை)



**வாகரைவாணன்**
(பழந்தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்புத் தமிழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15- 03 - 2007

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 54

(விடுதலைப் பயணம் 34: 21-35)
(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

ஆறுநாள்கள் நீ வேலை செய். ஏழாம் நாளில் ஓய்வு கொள். உழும் பருவத்திலும், அறுவடைப்பருவத்திலும் கூட ஓய்ந்திரு. கோதுமை அறுவடை முதற்பலன்போது வாரங்களின் விழாவையும், ஆண்டின் இறுதியில்.............விழாவையும் கொண்டாட வேண்டும். உங்களுள் ஒவ்வொரு ஆண்மகனும் ஆண்டில் மூன்று தடவை தலைவரும் இஸ்ரயேலின் கடவுளாகிய........... திருமுன் வரவேண்டும் . ஏனெனில், நான் வேற்றினத்தாரை உன் முன்னிருந்து துரத்திவிட்டு உன் எல்லையை விரிவுபடுத்துவேன். நீ ஆண்டில் மும்முறை உன் கடவுளாகிய ஆண்டவர் திருமுன் நிற்க வரும்போது உன் ........... எவனுமே பிடித்துவிடப்போவதில்லை. எனக்குச் செலுத்தும் பலியின் இரத்தத்தைப் புளித்த மாவுடன் படைக்காதே. பாஸ்கா விழாப் பலியில் எதுவும் காலைவரை எஞ்சியிருக்கக்கூடாது. உன் நிலத்தின் ....... பலன்களில் முதன்மையானவற்றை உன் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்திற்கு கொண்டு செல்வாய். குட்டியை அதன் தாய்ப்பாலில் வேக வைக்காதே. ஆண்டவர் ............ நோக்கி, " நீ இவ்வார்த்தைகளை எழுதிக்கொள், இவ் வார்த்தைகளின்படி நான் உன்னோடும் இஸ்ரயேலோடும் ஓர்........... ஏற்படுத்தியுள்ளேன் " என்றார். அவர் அங்கே நாற்பது பகலும் நாற்பது இரவும் ஆண்டவருடன் இருந்தார். அப்போது அவர் அப்பம் உண்ணவும் இல்லை ................ பருகவும் இல்லை. உடன்படிக்கை வார்த்தைகளான பத்துக்கட்டளைகளை அவர் பலகைகளின் மேல் எழுதினார். மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கிச் செல்கையில் உடன்படிக்கைப் பலகைகள் .......... தம் கைகளில் தாங்கிக் கொண்டிருந்தார். மோசே கடவுளோடு பேசியதால் அவர் முகத்தோற்றம் ஒளிமயாய் இருந்தது. ஆனால் மோசே அதை அறியவில்லை. ...................... இஸ்ரயேல் மக்களனைவரும் மோசேயைப் பார்த்தபோது, அவர் முகத்தோற்றம் ஒளிமயமாய்இருந்ததைக்கண்டு அவரை அணுகிச் செல்ல அஞ்சினர். மக்கள் மோசேயிடம் வர ஆண்டவர் சீனாய் மலையில் அறிவித்த அனைத்தையும் கூறினார். பின் தன் முகத்தின்மேல்............ போட்டுக்கொண்டார்.

**விடைகள் : முக்காடு, இரண்டையும், முதல், சேகரிப்பு, ஆரோனும், ஆண்டவர், நாட்டை, உடன்படிக்கை, தண்ணீர், மோசேயை**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிரிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 54

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக் கோடிடுக)

1. தமிழ்நாட்டில் கருங்கல் கோயில்கள் நிறைந்த கடற்கரை நகரம்
   (மாமல்லபுரம், மெரினாபீச், கன்னியாகுமரி)

2. திருமந்திரம் பாடிய சித்தர்
   (பாம்பாட்டிச் சித்தர், சிவவாக்கியர், திருமூலர்)

3. எதிர்வரும் ஒலிப்பிக் போட்டி நடைபெற இருக்கும் நாடு
   (அவுஸ்திரேலியா, சீனா, ரஷ்யா)

4. சாது மிரண்டால்.........
   (வீடுகொள்ளாது, நாடு கொள்ளாது, காடுகொள்ளாது)

5. "ஹைப்போதலமஸ்" என்னும் சுரப்பி உடலில் அமைந்துள்ள இடம்
   (சிரசு, வயிறு, மார்பு)

6. படித்துச் சென்றான் என்பதில் உள்ள படித்து என்பது
   (வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 54
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## விவிலியம் கற்போம் - 52 விடைகள்

சந்திப்புக் கூடாரம், நுழைவாயில், மேகத் தூண், கூடார, மோசேயிடம், நடத்திச்செல், பார்வையில், அறிந்து கொள்வேன், பிரசன்னம், உம்மக்களும்.

## அறிவை வளர்ப்போம் - 52 விடைகள்

1. அவுஸ்திரேலியா
2. அவுஸ்திரேலியா
3. எலக்ட்ரான்
4. இமுக்கு
5. 1975
6. உவமைத்தொகை

**போட்டியின் இருபிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி பரிசுபெறுபவர்**

- தே. ரகிலா டிலக்ஷினி
  C 9 தானியகம்,
  சீனக்குடா,
  திருகோணமலை.

**போட்டியில் ஒரு பிரிவுக்கு மட்டும் விடை அளித்துப்பரிசுபெறுவோர்**

- ர. அனஸ்ராஜ்
  இல 14, நீதிமன்ற வீதி,
  திருகோணமலை.
- A. மரினோராஜ்
  சிங்கள மகா வித்தியாலயம்,
  (அகதிமுகாம், மண்முனை)
  மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

- N. டிலக்ஷன்
  101/10, 1ம் குறுக்கு,
  மாமங்க வீதி,
  புன்னைச்சோலை,
  மட்டக்களப்பு.
- G. நோயல்
  மாரியார் வீதி,
  கல்முனை - 3.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Registered as a News Paper in Sri Lanka.

கணினி வடிவமைப்பின் மூலம் சிறந்த அச்சுப்பதிவுகளுக்கு....

# வணசிங்கா பிரிண்டர்ஸ்

# Wanasinghe Printers





தொ.பே. இல.
060-2650361

126/1 திருமலை வீதி,
மட்டக்களப்பு.

---

## காற்றில் கலந்துவரும்.....

**இலங்கை வானொலி தேசிய சேவையில்**

**கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்**

**தவக்காலச் சிறப்பு நிகழ்ச்சிகள்**

**திருநீற்றுப் புதன் முதல் தவக்கால வெள்ளிகள் தோறும் இரவு 10.00 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் சிறப்பம்சமாக விளங்கும் சிலுவைப் பாதைச் சிந்தனைகளை அருள்தந்தை டக்ளஸ் ஜேம்ஸ் அவர்கள் தயாரித்துள்ளார்.**

---

நிகழ்ச்சித் தொகுப்பு : மலர்வேந்தன்

தொடர்பு. சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road , Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org